


ரூபா 20/-
மே - ஓகஸ்ட் 2021
இதழ் 4

# எங்கள் முற்றம்

கலை இலக்கிய சமூக இதழ்

**ஆச்சரியங்கள்** நிறைந்த நெடுங்கேணி

**வெடுக்குநாறி மலைக் குகைகள்**



# குழந்தைகள் பேணகம்


# Children Daycare Center

முற்றிலும் மனங்கவர் சூழலில் மழலைகளின் மகிழ்விடம்

தொழில் செல்லும் பெற்றோர் பிள்ளைகளுக்கான
பகல் நேர குழந்தைகள் பேணகம்

2 1/2 வயது முதல் பாலருக்கான பராமரிப்புடன்
கூடிய விளையாட்டு, குழுச் செயற்பாடுகள், ஆடல் பாடல்,
கணனிமூலமான கற்பித்தல், ஆங்கில, தமிழ் மூல கற்கை

மறுமலர்ச்சி மன்றம் காலையடி, பண்டத்தரிப்பு 0771041945



விபரங்கள்
அடுத்த இதழில்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் முற்றம்
Engal Muttam
இதழ் 4 மே-ஓகஸ்ட் 2021

# மாதம் ஒரு குறள்

அறத்துப் பால்- அதிகாரம்: அமைச்சியல் குறள் 217

கற்றறிந்தார் கல்வி விளங்குங் கசடறச்
சொற்றெரிதல் வல்லா ராகத்து.

ஆசிரியர் : அழ. பகீரதன்

ஆக்கங்களிற்கு பொறுப்பு எழுதிய எழுத்தாளர்களே. கதைகளில் வரும் சம்பவங்கள், பாத்திரங்கள் யாவும் எழுத்தாளரின் கற்பனையே. ஆக்கங்களை சுருக்கவும் மாற்றவும் ஆசிரியருக்கு உரித்துண்டு. ஆக்கங்களின் கருத்துகள், இதழில் வரும் விளம்பரங்களின் கருத்துகள் எவற்றுக்கும் இதன் வெளியீட்டாளரான 'மறுமலர்ச்சி மன்றம் நம்பிக்கை' பொறுப்பாகாது.

*வடிவமைப்பு:*
எஸ். ரி. அனுஜன் | சிவ. பரதன்
*விளம்பர சேகரிப்பு:*
புத்தகப் பண்பாட்டுப் பேரவைக்காக
அருந்தவராசா ஹிரித்யா | கு. ஸாரங்கன்
*விநியோகம்:*
ச.சசீலன், கனிஸ்ரன், பகிதரன், நிவேந்தனா
*வெளியீடு:*
மறுமலர்ச்சி மன்றம் நம்பிக்கை
Marumalarchchi Mantram Trust
காலையடி, பண்டத்தரிப்பு, இலங்கை
Kalaiyady, Pandatheruppu

நாம் 'எங்கள் முற்றம்' இதழினை மாதந் தோறும் வெளியிடும் அரியமுயற்சியில் உங்களுடன் பேசுகின்றோம்.

எங்கள் முற்றம் நான்காவது இதழ் வெளிவருவது மனநிறைவு தருகின்றது. காலம் கடந்து வருகின்றது. நாம் இதழை மாத இதழாகவே வெளிக்கொணரத் திடசங்கற்பம் பூண்டுள்ளோம். கொரானாக் காலத்து நடைமுறைகளுக்கமைவாக பயணிப்பதனால் விநியோகத்தில் முன்னேற்றம் இல்லையென்பதால் கால இடைவெளி அதிகமாகிறது. இந்த இதழை இருபது ரூபாயில் தொடர்ந்து உங்களுக்குத் தருவதற்காக உதவி செய்யும் அனைத்து அனுசரணையாளர்களுக்கும் விநியோகத்தில் ஈடுபடும் இளைஞர்கள் யுவதிகளுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தொல்லைகள் பலவிருப்பினும் தொடர்ந்து செல் என இலக்கு நோக்கி நகரும் எங்கள் முயற்சி திருவினையாக்கும்.நலன் பேணுதற்கான அனைத்துச் சுகாதார வழிமுறைகளையும் கைக்கொள்வோம்.

ஆக்கங்களைக் காலதாமதம் ஏற்படுத்தாமல் அனுப்பி வைக்கவும் தொடர்ந்து எழுதுங்கள். விமர்சியுங்கள்.

முகவரி :
ஆசிரியர்,
எங்கள் முற்றம்,
மறுமலர்ச்சி மன்றம்,
காலையடி, பண்டத்தரிப்பு.
marumalarchy1972@gmail.com
T.P +94 771041945

Siva construction
கட்டிடப் பொருட்கள் விற்பனை நிலையம்
077 301 8600 077 585 8820
Court Road Mallakam



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நாளைய சந்ததிக்கு 'கவிஞர் சுபத்திரன் கவிதைகள்' வழிகாட்டுமா?

அழ. பகீரதன்

அது யாழ்ப்பாணத்தில் சாதியத்துக்கு எதிரான போராட்டம் எழுச்சியுற்ற காலம். ஆங்காங்கே உயர் சாதியினருக்கு ஆதரவாக காவல்துறையினர் தங்கள் கைவரிசையினைக் காட்டத்தொடங்குகின்றனர்.


அஞ்சி ஒடுங்கவில்லை. தீண்டாமைக்கெதிரான போராட்டம் வீச்சம் பெறுகிறது.
மட்டக்களப்பிலிருந்து கவிஞர் சுபத்திரன் வருகிறார். இலங்கையில் சுதந்திரத்தின் பின் எழுந்த முதல் ஆயுதப் போராட்டம் அல்லவா?
கவிஞன் பாடுகிறான்:

எச்சாமம் வந்து
எதிரி நின்றாலும்
நிச்சாமக் கண்கள்
நெருப்பெறிந்து நீறாக்கும்
குச்சுக் குடிசைக்குள்
கொலுவிருக்கும் கோபத்தை
மெச்சுகிறேன் - சங்கானை
மணணுள் மலர்ந்த
மற்ற வியட்நாமே- உன்
குச்சுக் குடிசைக்குள்
கொலுவிருக்கும் கோபத்தை
மெச்சுகிறேன் - சங்கானை
மண்ணுள் மலர்ந்த
மற்ற வியட்நாமே

ஆம் அந்தப் போராட்டக் கவிஞன் வடித்த கவிதை வரலாறாய் துலங்குகிறது.

இனவாதத் தீக்குள் சிக்குண்டு நிலைமாறிப் போனோரின் 1971 ஏப்ரல் தெற்கில் வெடித்த ஆயுதப் போராட்டத்தின் பின் நெறிதவறிய நிலைமை கவிஞன் குரல் கேட்கிறது.

எழுபத்தியொன்று
ஏப்ரலின் பின்
பரிநிர்வாணமுற்ற
முன்னைநாட் புரட்சிவாதிகளில்
பிச்சா பாத்திரத்தில்
துரோகச் சில்லறைகள்
நிறைந்து கிடக்கின்றன!
அரசு நிழலில் இவர்கள் பெற்ற
''ஞானோதய'' த்தைச்
சுமந்து கொண்டு
வேகமாக
மகிந்தர்களும்
சங்கமித்திரைகளும்- தங்கள்
தேவ நம்பிய நீசனுகளைத் தேடி
அரசுக் கிளைகளை நடப்
புறப்பட்டுள்ளனர்
ஆனால்... நாங்கள்
எங்கள் சிதைவுகளிலும்
இடிபாடுகளிலும்
உங்கள் அரசுக் கிளைகளில்
வேர்கள்
ஓடவிட மாட்டோம்



தெற்கில் இனவாதமும் வடக்கில் சாதிய வெறியும் ஊட்டி வளர்க்கப்பட்ட காலம் அது. ஏகாதிபத்திய நிகழ்ச்சி நிரலில் இந்த நாட்டு மக்களிடையே பிளவுகள் தூண்டப்பட்டன.

வடக்கினிலே சாதிவெறி மூட்டிவிட்டு
தெற்கினிலே இனவெறியை கொழுந்துவிட்டு
படமெடுத்து ஆட்டுகின்ற நச்சுப்பாம்பாம்
பனிபடரும் மலையினிலே ஆடுகின்ற
முடக்கழுதை நம்மீது சவாரிசெய்ய
முதுகுதனைக் குனிந்து நாம் கொடுத்தோம் போதும்
அட! தமிழா எழுந்திடடா எரிதழலால்
அக்கினியின் விழாவெடுத்து விடிவு காண்போம்

இலவசக் கல்வி எல்லோருக்கும் வாய்த்தது என மகிழ்வதற்கு என்ன இருகக்கிறது. மக்களைச் சிந்திக்க வைத்துத் தம் அடிமை நிலை மாற்றுமா கல்வி. முதலாளித்துவம் தொழிற்படை ஒன்றைத் தனக்குச்சாதகமாக உருவாக்கத் திணித்த பாடத்திட்டங்களைக் கொண்ட வகுப்பறை உழைக்கும் மக்களின் வாழ்நிலையில் மாற்றம் கொண்டுவருமா? படித்தவர்கள் ரோபாக்களானது தான் நிலைமை.

சுரண்டலுக்குத் துதிபாடும் கல்விகற்றுச்
சூதுக்கு நாமுடைமை ஆகலாமோ?
வரண்ட பெரும் பாவத்தை அறிவு என்று
வாய்கூசாது பற்றி வாழ்த்தலாமோ?
திரண்டெழுந்து நிற்கின்ற பாட்டாளிக்குத்
திட்டுகின்ற புத்தகத்தைச் சுமக்கலாமா
சரணடையப் பயிற்றுவிக்கும் கல்வி எங்கள்
சக்திதனை உறிஞ்சுகின்ற சவக்காடம்மா?

இனவாதத்தை ஊட்டி வளர்த்ததில் இந்த வகுப்பறைகளுக்கும் பங்குண்டல்லவா?

பக்குவமாய் வாங்கினிலே குந்திக்கொண்டு
பாய்ந்து வரும் உணர்ச்சிகளை அடக்கிக்கொண்டு
சொக்குக்குள் பழமை தரும் குற்றம் தன்னை
சப்பி வெறும் துப்பலென துப்பிக்கொண்டு
வெட்கமிலா வாழ்வதற்கு வாழ்கின்றோம்!

எங்கள் கல்விநிலையைச் செப்பி 'மக்களே நமது பாடசாலை' என்கிறார் கவிஞர்.

எல்லாம் வல்ல
மனிதனேயுன்னை
வெல்லுதற் கெந்தப்
பிரபஞ்சத்துள்ளும்
எதுவுமேயில்லை
எழு! எழு! இன்றே
மாஓ தலைமையில்
அணிவகுக்கின்ற
அணியிலே நில்லு

என்று 1977இல் உரைத்த அந்தக் கவிஞனின் வாய்மொழியை நாம் புரிந்தோமில்லை. முதலாளித்துவ அமைப்பைக் கட்டிக்காக்கின்ற பல்கலைக்கழகங்களில் துணைவேந்தராய் வரமுடிகின்ற இந்த கல்வி முறையால் ஏன் மானிடரிடையே இலங்கைத் தீவதில் சமத்துவத்தைக் கொண்டுவர இயலவில்லை.

உழைக்கும் மக்களிடையேயிருந்து முதல்வர் உருவாகும் காலமே சமத்துவத்திற்கான பாதை திறக்கும் என்ற உண்மை புரிய 'கவிஞர் சுபத்திரன் கவிதைகள்' நாளைய சந்ததிக்கு வழியொன்று காட்டுமா? ❒



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூதாட்டியின் சாமர்த்தியம்

சிவகரன் வித்தவரி
தரம் 4
யா/மகாஜனாக் கல்லூரி



ஒரு ஊரில் ஒரு மூதாட்டி வாழ்ந்துவந்தார். அவர் தனது மகளைத் தேடிச் செல்லும் போது ஒரு காட்டைக் கடந்துதான் செல்லவேண்டும். அதனால் அந்த மூதாட்டி செல்லத் தொடங்கினார். அங்கே செல்லும் போது மூன்று மிருகங்களைக் கண்டார். முதலாவதாகக் கண்ட மிருகம் சிங்கம். அந்தச் சிங்கம் மூதாட்டியைப் பாரத்து, "எங்கே செல்கிறீர்கள்" என்று கேட்டது. அதற்கு அந்த மூதாட்டி "நான் எனது மகள் வீட்டிற்குச் செல்கிறேன்" என்று பதில் கூறினார். அதற்கு அந்தச் சிங்கம் கூறியது "நீங்கள் எப்படி உங்கள் மகள் வீட்டிற்குச் செல்வீர்கள். அதன் முன்பு நான் உங்களைச் சாப்பிட்டு விடுவேன்"

அதற்கு அந்த மூதாட்டி "இல்லை... இல்லை... சிங்கமே நான் கூறுவதைக் கேள் என் மகள் வீட்டிற்குச் சென்று நன்றாகச் சாப்பிட்ட பின்பு என்னை நீ சாப்பிடு. அப்பதான் உன் பசி அடங்கும்" என்று கூறினார்.

அதற்குப் பிறகு அந்தச் சிங்கம் வழி விட்டது. மூதாட்டி நடந்து சென்றார். அத்றகுப்பிறகு கரடி வந்தது. அந்தக் கரடியும் சிங்கத்தைப் போலவே கேட்டது. அதற்கு அந்த மூதாட்டி சிங்கத்திற்கு கூறிய பதிலைக் கூறினார். அந்தக் கரடியும் மூதாட்டிக்கு வழிவிட்டது. அந்த மூதாட்டி சென்றார். அதற்கும் பிறகு அந்த வழியால் புலி வந்தது. அதுவும் சிங்கமும், கரடியும் கேட்டதையே கேட்டது. சிங்கதிற்கும் கரடிக்கும் கூறியதையே கூறினார். அதற்கு அந்தப் புலியும் ஒத்துக் கொண்டது. அந்த மூதாட்டிக்கு வழிவிட்டுக் கொடுத்தது. அதன் பிறகு அந்த மூதாட்டி தன் மகள் வீட்டிற்குச் சென்றார். தனக்கு நடந்ததைக் கூறினார்.

அந்த மூதாட்டியின் மகள் ஒரு யோசனை கூறினாள். அதன் பிறகு அந்த மூதாட்டி தன் வீட்டிற்குச் செல்லவேண்டும் என்று நினைத்தார். அதன்பிறகு அவர் யோசனை எல்லாம் நடந்தது. அந்த மூதாட்டி தன் வீட்டிற்குச் செல்லும் நேரம் வந்தது. அதற்குப் பின் அந்த மூதாட்டி காட்டுப் பகுதியில் நடந்து சென்றார். அங்கே முதலில் புலி வந்தது. அந்தப் பாட்டி மாறுவேசத்தில் சென்றபடியால் புலிக்கு அடையாளம் தெரியவில்லை. அந்தப் புலி மாறு வேசத்தில் சென்ற பாட்டியிடம் "யாராவது மூதாட்டி சென்றதைக் கண்டீர்களா?" என்று கேட்டது புலி. அதற்கு மாறுவேசத்தில் இருந்த பாட்டி "நான் காணவில்லை. ஒரு மூதாட்டிகளையும் நான் பார்க்கவில்லை" என்று மாறு வேசத்தில் இருந்த பாட்டி பதிலளித்தார். அந்தப் புலி சொன்னது "நீங்கள் சென்று வாருங்கள்" என்றது. புலி அதற்குப் பிறகு மூதாட்டி நடந்து சென்றார். அதன் பின் கரடியும் வந்தது. புலி கேட்டதுபோல கரடியும் மாறு வேசத்தில் இருந்த மூதாட்டியிடம் கேட்டது. புலிக்குச் சொன்ன பதிலையே கூறினார். அந்த மூதாட்டிக்கு கரடி வழி விட்டது. அதன்பின் மூதாட்டி நடக்கத்தொடங்கினார். அதன் பின் சிங்கம் வந்தது. சிங்கமும் புலி, கரடி, கேட்டதையே சிங்கம் கேட்டது. அதற்கு அந்த மூதாட்டி புலிக்கும், கரடிக்கும் கூறியதையே சிங்கத்திற்கும் கூறினார் மூதாட்டி. அதற்கு அந்தச் சிங்கமும் வழிவிட்டது. அந்த மூதாட்டி மகிழ்ச்சியாக வீட்டிற்குச் சென்றார். அதன்பிறகு மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தார். □

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுத் தூபி

வள்ளியம்மை சுப்பிரமணியம்

கார்த்திகேசுவும், காங்கேசுவும் நெருங்கிய நண்பர்கள். இருவரும் ஒன்றாகவே படித்து ஒன்றாக ஒரே திணைக்களத்தில் பணியாற்றி வருகின்றனர். அவர்கள் இருவருக்கும் மனதில் ஒரு இலட்சியம் நீண்ட நாட்களாக இருக்கின்றது. அதாவது ஒவ்வொரு கிராமத்திலும், வாழ்ந்து, மனித சமுதாயத்திற்கு, விழிப்புணர்வை ஊட்டும் மூடக்கொள்கைகளை களையும் சீரிய வழியில் வாழ்ந்து மறைந்த பெரியோர்களுக்கு அந்தந்த ஊர்களில், அவர்கள் உருவம் அமைந்த நினைவுத் தூபிகளைக் கட்டுவிப்பதாகும். வளர்ந்துவரும் புதிய சமுதாயக் குழந்தைகளுக்கு இந்தச் செயலானது ஒரு நல்ல ஊக்குவிப்பை ஊட்டும் என்பதால் தான்.

எத்தனையோ பெரியார்கள் செயற்கரிய செயல் செய்து, வாழ்ந்து மறைந்துவிட்டார்கள். ஆனால்...! அவர்கள் அந்த உன்னத நிலையை எய்துவதற்கு என்னென்ன துன்ப துயரங்களுக்கு முகங்கொடுத்தார்கள் என்பது சமூகத்தின் பார்வைக்குத் தெரியாமல் போய்விடுகிறது. அவர்களது இலட்சியத்தை ஒரு சிலர் வரவேற்றும் பலர் எதிர்த்தும்... அவர்கள்முன் எதிர்நீச்சல் போட்டு, இறுதியில் அவர்கள் தமது கொள்கையில் வெற்றி பெற்றதை... அந்த தூபிகளில் மூன்று மொழிகளிலும் எழுதி, அழியாத வரலாறாக வைப்பதே ஆகும்.

தாய்மொழியாம் தமிழ் மொழியை ஐயந்திரிபறக் கற்றுக்கொடுத்த ஆசிரியர்-பண்டிதர் அவர்களுக்கும், ஆங்கில மொழியை இலக்கண சுத்தமாகப் படிப்பித்த ஆசிரியை திலகலஷ்மி அவர்களுக்கும், சிங்கள மொழியை வெகுசிரமத்தின் நடுவே புகுத்திய Dr தம்பையா அவர்களுக்கும் முன்னுரிமை கொடுத்து... இந்த மூன்றையும் முதலில் செய்து முடிப்பது... பின்னர் அயற் கிராமங்களுக்கும் தமது இலட்சித்தை விரிவுபடுத்துவது என்பதே திட்டம்.

இவற்றிற்கெல்லாம் முதலில் பணத்தைச் சேர்க்க வேண்டுமே! அதன் பின்னர் தான் தமது எண்ணம் பூர்த்தியடைய முடியும்! ஒவ்வொரு அறிஞர்களின் உருவம் பொறிக்கப்பட்டு- பிறந்த திகதி- மறைந்த திகதி... ஆற்றிய சேவைகள் இரத்தினச் சுருக்கமாக... அழகிய கையெழுத்தில் எழுதக் கூடிய செல்வி விஜயலட்சுமி சிவப்பிரகாசத்திடமும், உருவ வரைபடத்தினை நவாலி சந்திரன் செல்லையாவிடமும் ஒப்படைத்தனர்.

ஒவ்வொரு நினைவுத் தூபிகளும் மக்கள் நடமாடும் பொது இடத்தில் அமைக்கவேண்டும். அதற்கு கிராமசபை ஊடாக- கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்... அரசாங்க அதிபர் வரை சென்று... மாதிரி விளக்கப்படங்களைச் சமர்ப்பித்து... உத்தரவும் வாங்கிக் கொண்டனர். அத்தூபிகள் கடுங்காற்று, புயல், மழை, இடி, மின்னல் இவற்றால் தாக்கப்படாமல்... காலப்போக்கில் சிதைவடையாமல் இடிதாங்கி முதலிய பாதுகாப்பு இணைப்புடன் கட்டப்பட்டது' என்ற உத்தரவாதத்துடன் அமைத்தனர்.

முதலில் தாய்மொழியாம் தமிழ் மொழி ஆசானாய்ச் சேவை செய்து மறைந்த பண்டிதர் ஆறுமுகம் அவர்களுடைய தூபி... அவரது கிராமமாகிய பண்ணாகத்தில் விசவத்தனை முருகமூர்த்தி கோவிலின் அயலில் கட்டப்பட்டது. அன்னார் எழுதி வெளியிட்ட முருகன் பாடல்கள், ஆலய வரலாறுகள், தனது கிராமமாகிய 'பண்ணாக மான்மியம்'' உட்பட பல நூல்களின் பெயர்கள்... அங்கே பதிவு செய்யப்பட்டன. இந்த நற்செயலை அறிந்து அவ்வூர் இளைஞர்களும், அயற்கிராம இளைஞர்களும் தங்களால் இயன்ற உடலுழைப்பை நல்க முன்வந்தனர். பூரண ஆதரவு தெரிவித்தனர். அதன் இன்றியமையாமையை உணர்ந்தனர்.

அந்த நினைவுத் தூபிகளின் மேல் காக்கை, குருவிகள் உட்கார்ந்து எச்சமிடாமல் கம்பி- அதாவது கூரான இணைப்பும் இணைக்கப்பட்டது. இந்த அபூர்வமான நிகழ்ச்சியானது சகல மக்களுக்கும் அறிவுக் கண்ணைத் திறந்துவிட்டது.

இரண்டாவதாக சிங்கள மொழியில், திருவள்ளுவரின் திருக்குறளை மொழிபெயர்ப்புச் செய்த டாக்டர் இ. தம்பையா அவர்களின் உருவச்சிலை பற்றியது. அன்னாரிடம் சிங்கள மொழியைக் கற்றுத் தேறி.. அரசாங்க இலாகாகளில் கடமையாற்றி ஓய்வுபெற்ற ஆசிரியர்கள், போலீஸ் உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர்கள், மருத்துவ மாதுகள் எனப் பலதரப்பட்ட மக்களும் அறிந்தறிந்து ஆதரவுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரம் நீட்டினர். முதலில் செய்த பண்டிதரின் தூபி போல சகல ஒழுங்கு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. மக்கள் பெருந்தொகையாக கூடுமிடமான பறாளாய் விநாயகர் ஆலயத்தின் கிழக்குப்புறமாக நீதிநாதன் ஐயாவின் வீட்டின் முன்பாக அமைக்கப்பட்டது. பக்கத்தில் நிழல்தரு மரங்களாகிய வேம்பும், அரசும் நாட்டப்பட்டன. ஆலயத்தை வழிபடவரும் பக்த கோடிகளுக்கும் இந்த இரட்டை இளைஞர்களின் செயல் அறிவுக் கண்ணைத் திறந்தது.

இந்த மண்ணில் பிறந்தோம்... படித்தோம்... உண்டோம்... உறங்கினோம்.. வாழ்ந்தோம்.. மறைந்தோம்... என்றில்லாமல்... நாம் பிறந்து வளர்ந்த மண்ணில் செயற்கரிய செயல்கள் செய்த மனித தெய்வங்களின் உருவத்தை... அவர்களால் எழுதப்பட்ட நூல்களை புதிய சந்ததிகள் அறியவைக்க வேண்டுமல்லவா?

மேற்படி அறிஞர்களின் நினைவாலயங்கள் நாட்டியது போலவே ஆங்கில ஆசிரியை திலகலஷ்பியின் நினைவுத் தூபியும் வட்டு-அலாலி சந்திக்கு அணமையில் அவரின் மாமனாரின் வயல்வெளி வரப்பு நிலத்தில் நாட்டப்பட்டது. அவவினால் எழுதப்பட்ட சிறுவர்களுக்கான ஆங்கிலச் சிறுகதைகள், பாடல்கள், நாடகங்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் பற்றிய விபரங்கள் எழுதப்பட்டன. அந்த தூபியைச் சுற்றிப் பலவிதமான பூமரங்கள் நாட்டப்பட்டன. தினமும் அந்த வயலில் வேலை செய்வோர் தவறாமல் பூமரங்களுக்கு தண்ணீர் விடத் தவறுவதேயில்லை. "ரீச்சர் மறைந்தாலும் அவர் படிப்பித்த எங்கடை பிள்ளையள் இண்டைக்கு எந்தப் பெரிய... பெரிய பதவிகளில் இருக்கிறார்கள். அதற்கு கைமாறாக நாங்கள் தினமும் தண்ணீர் விடுகிறோம்" என்றார்கள்.

அந்த நிகழ்ச்சிகளின் அடியற்றி ஒவ்வொரு கிராமத்திலும் நினைவுத் தூபிகள் நாட்டப்பட்டன. அவைகளின் விபரம் பின்வருமாறு:

1. காரைநகர் அமரர் தியாகராசா அவர்களின் தூபி - காரை இந்துக்கல்லூரி அயலில்... சயம்பரில் அருகில்.
2. காரைநகர் நீலிப்பந்தனை என்ற இடத்தில் மாதர் சங்கம் ஒன்றின் தலைவியாக இருந்து ஏழைப்பெண்கள் வாழ கைத்தறி நிலையம், மாதர் சங்க தையல் நிலையம் நிறுவியமை திருமதி மங்கையற்கரசி முருகேசு அவர்களுக்கு.
3. அதுபோல சிறு குழந்தைகள் தொடக்கம் முதியோர் வரை வைத்தியம் செய்த Dr இராசசேகரம் என்பவருக்கு புது றோட் சந்தியில் ஒரு நினைவுத் தூபி.
4. வட்டுக்கோட்டை இறாத்தலடி இராச வைத்தியராக இருந்து புத்தி சுவாதீனம் குழம்பிய பலரைச் சுகப்படுத்திய அமரர் குமாரசாமிக்கு இறாத்தலடிச் சந்தைக்கு அருகில்.
5. காரைநகர் வியாவில் என்ற கிராமத்தில் 'வார்த்தா' என்ற பெயரில் காந்தீய அறநெறிப்பாடசாலையை நடாத்திய பெரியார் அமரர் நவரத்தினம் அவர்களுக்கு
6. காங்கேசன்துறை டாக்டர் சீனிவாசகம் அவர்களுக்கு மயிலிட்டிச் சந்தியில்...
7. மாதகலில் பிறந்து சீன நாட்டு வானொலியில் தமிழ் மொழி மூலம் ஒலிபரப்புச் சேவை செய்த மாதகல் வ. கந்தசாமி ஆசிரியருக்கு நுணசை முருகமூர்த்தி ஆலய அருகில்...

❐



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாழ்வின் கடைசிப் பக்கம்

எங்கு பார்த்தாலும் நோயாளிகள். வெவ்வேறு வயதில் வெவ்வேறு உபாதைகளுடன் நோயாளிகள். வேதனை படிந்த முகங்கள். இரத்தக்கறை படிந்த தரைகள். அடிவயிற்றைப் புரட்டும் மருந்து வாசனை. வெளிச்சம் வராது பகலிலும் விளக்குகள் எரியும் நீண்ட அறைகள். எல்லோர் முகத்திலும் வாழ்வின் மீதான வெறுப்பு.

வாழ்வின் விளிம்பிலிருந்து துரத்தப்பட்டவர்கள் போல் அந்நோயாளிகள் காணப்பட்டனர். அந்நோயாளிகளுக்கிடையில் படித்தவர்கள் முதல் செல்வந்தர்கள் வரை, பணக்காரர்கள் முதல் ஏழைகள் வரை எவ்விதப் பாகுபாடுமின்றி ஓர் ஒற்றுமை காணப்பட்டது. அது என்னவென்றால் அவர்கள் அனைவரும் தற்போது நோயாளிகள். அதுவும் ஒரே விதமான கட்டிலில் படுத்திருந்தனர். அந்நோயாளிகளில் நோயாளியாக என் ஆசிரியர் ஒருவரும் அங்கிருந்தார். நாடகத்துறையில் ஈழத்தில் மட்டுமன்றி தமிழகத்திலும் ஏன் உலகளவில் கூட நன்கறியப்பட்ட ஆளுமை என்றே கூறலாம். நாதன் என்பது அவர் பெயர்.

★★★

இரண்டு வருடங்களுக்கு முன்பு நாடகம் பயில அனுமதி கேட்பதற்காக அவ்வாசிரியரின் வீட்டிற்குச் சென்றிருந்தேன். பழைய நாச்சார வீடது. விசாலமாக காட்சியளித்தது. வீட்டின் வெளி முற்றத்தில் கிளிக் கூடொன்று வெறுமையாக இருந்தது. அக்கூண்டை உற்றுநோக்கிக் கொண்டு ஆழ்ந்த யோசனையில் இருந்தார்.

நான் அவர்வீட்டின் பிரதான கேற்றடியில் நின்று கொண்டு 'உள்ள வரலாமா சேர்' என்று குரல் கொடுத்தேன். அது ஒருவித மரியாதையும் பயமும் நிறைந்த குரலாக இருந்தது.

என்னை சற்று உற்று நோக்கிய பின்பு 'வாரும்' என்று வரண்ட குரல் கொடுத்தார்.

நான் சைக்கிளை வெளியே நிறுத்திவிட்டு வீட்டு வாசலைத் திறந்துகொண்டு மெதுவாக உள்ளே நடந்து சென்றேன்.

வாரும் கதிரையில உட்காரும் என்று கனிவான குரலில் கூறினார்.

சிறிது நேரத்தில் தம்பி சொல்லும் என்ன சம்பந்தமா பார்க்க வந்திங்கள் எண்டு என்றார்.

நான் தயங்கிக் கொண்டு "சேர் நான் உங்களிட்ட நாடகம் பயிலலாம் எண்டு வந்திருக்கன் சார். அதான் உங்களிட்ட அனுமதி கேட்கவந்திருக்கறன்" என்றேன்.

ம்ம்.... என்ட நாடகம் எதாவது பார்திருக்கிறீங்களா? என்று என்னிடம் கேட்டார்.

ஒரு படைப்பாளிக்கு மகிழ்ச்சி தருவது வெறும் பரிசு மட்டுமல்ல. அவனது படைப்பு வாசகனால் விரும்பி வாசிக்கப்படுவதே.

"நான் 'மகனும் வெளிநாடும்' என்ற நாடகத்தை பார்த்திருக்கிறன் சேர்" என்று சந்தோசமாக பதில் வழங்கினேன். "அதில வெளிநாட்டிற்கு பெற்ற பிள்ளைகள் இரண்டையும் அனுப்பிவிட்டு வயது போன நேரத்தில தாய், தந்தையர் அனுபவிக்கிற கொடுமையை அப்பட்டமா படம் பிடிச்சுக்காட்டியிருந்தீங்கள் சேர். அந்த நாடகம் மனசை ரொம்ப பாதிச்சிது சேர் அது ஒரு சமுதாயப் பதிவுசேர்" என்றேன்.

அவர் என்னை ஏற இறங்கப் பார்த்துவிட்டு "இரும் தேத்தண்ணி கொண்டு வாரன்" என்று உள்ளே தள்ளாடியபடியே போனார். நான் வேண்டாம் என்று தடுத்தும் கேட்கவில்லை. சிறிது நேரத்தில் சிறிய ரம்லரில் சூடான கோப்பி கொண்டு வந்தார்.

நான் கோப்பியைக் குடித்துவிட்டு "சேர் தனியாகவா இருக்கிறீங்க. பிள்ளைகள் எங்க சேர்" என்று கேட்டேன்.

"உன்ரை கேள்விக்கான பதிலை நீயே இப்ப சொன்னீயே. அதுதான், மகனும் வெளிநாடும் என்ற நாடகத்தில வெளிநாட்டுக்குப் பிள்ளையள அனுப்பிப் போட்டு கஸ்ட்டப்படுற தாய் அதோ அந்த சுவரில தொங்கிற படத்தில உள்ள என்ர மனைவி. தந்தை வேற ஆருமில்ல நான் தான்" என்று கண்ணீர் சொரியக் கூறினார்.

நான் சற்று நிதானம் இழந்து போனேன். இப்படி ஒரு ஆளுமைக்கு அவரின் முதுமைக் காலத்தில் பார்த்துக்கொள்ள பெற்ற பிள்ளைகள் யாரும் இல்லாத சூழ்நிலையா என்று...

"மன்னிச்சுக் கொள்ளுங்கோ சேர். உங்கட மனச நான் கஷ்டப்படுத்தியிருந்தால் என்னை மன்னிச்சுக்கொள்ளுங்கோ" என்றேன்.

அவர் என்னை ஏற இறங்கப் பார்த்துவிட்டு "உன்னச் சொல்லிக் குற்றமில்லைத் தம்பி. ஏனெண்டா என்ரை பிள்ளையள் இரண்டும் வெளிநாட்டிலைதான். கதைக்கமாட்டாங்கள் எண்டில்லை. கதைப்பினம். எப்பாவது இருந்திட்டு. காசு போடுவினம் மாதத்துக்கு ஒருக்கா. எனக்கு அதெல்லாம் பெரிசில்ல தம்பி. கொஞ்ச ஆறுதலுக்கு கதைச்சாக்கூட சந்தோசமாக இருக்கும். வயது போன நேரத்தில எல்லாரும் விரும்பிறது யாராவது கொஞ்சநேரம் எங்களோடை கதைக்கவேணுமெண்டுதான்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீங்க ஒரு கிழமை கழிச்சு வாங்கோ தம்பி. நான் உங்களுக்கு நாடகம் சம்பந்தமான முக்கிய நுணுக்கங்களைக் கற்றுத்தருகிறேன்" என்று பேசிக்கொண்டிருக்கையில் சிறுவன் ஒருவன் வீட்டின் வாசலடியில் நின்று "ஐயா! இடியப்பம் இல்லயாம் பாண் மட்டும்தான் இருந்தது. இண்டைக்குச் சமாளிச்சு சாப்பிடுங்கோ" என்று சாப்பாட்டுப் பாசலைத் தந்துவிட்டு "ஐயா! நாளைக்கு காலை நான் வரமாட்டன். நீங்க கடையில ஏதாவது வாங்கிச் சாப்பிடுங்கோ" என்று கூறிவிட்டுச் சென்றான்.

நானும் சிறிது நேரம் பேசிவிட்டு "எதாவது உதவி வேனுமெண்டா கேளுங்கோ சேர்" என்று கூறிவிட்டு அவ்விடம் விட்டு நகர்ந்தேன்.

இரண்டு வருடங்கள் கடந்தன. அவரிடமிருந்து ஏராளமான விடயங்களைக் கற்றுக் கொண்டேன். குறிப்பாக ஒரு விடயத்தை நன்றாகப் புரியும் படியாகவும் சிந்தனைக்குச் சவால்விடும் படியாகவும் அமைந்த அவரின் கற்பித்தல் முறை என்னை நன்கு பாதித்தது. மாணவர் கேட்கும் கேள்விகளுக்கு விடை தெரிந்தால் சொல்லிக்கொடுப்பார். ஒருவேளை தெரியாவிட்டால் மறுநாள் தேடிக் கொண்டு வருவார். ஆசிரியர் என்பவர் கற்றவர் அல்லவே. அவர் கற்றுக் கொடுப்பவர் ஆயிற்றே. நிறைந்த புத்தக வாசிப்பும் தேடலும் உள்ள ஆசிரியரவர்.

★★★

இன்று... மனதில் பலவித நினைவுகள் கருமேகங்கள் போல குடிகொண்டன. மனிதர்களின் அற்ப ஆயுளின் இறுதிக்காலத்தில் கூட, உறவுகள் இல்லாத துயரால் பலர் இன்றும் வாடிவருகின்றார்கள். ஆனால், இன்று நாதன் என்ற நாடக ஆளுமை வைத்தியசாலையில் பெற்ற பிள்ளைகள் அருகில் அற்ற நிலையில்



இறந்திருப்பதைக்கண்டு உளம் நொந்துபோனேன். ஆள் அற்ற மருத்துவர்களின் அறைகளில் சுற்றிக்கொண்டிருந்தன மின்சார விசிறிகள். நோயாளிகளைப் பார்க்கும் நேரம் முடிந்ததால் எல்லோரும் வெளியே போகுமாறு துரத்தப்பட்டார்கள். அப்போது அறுபது வயது மதிக்கத்தக்க முதியவர் ஒருவர் ஓடிவந்து சாப்பாட்டுப் பாசல் ஒன்றை ஆசிரியரின் அருகில் வைத்துவிட்டு "உடம்ப பார்த்துக்கோ. நான் வாறன்" என்று கூறிவிட்டுச் சென்றார்.

ஆஸ்பத்திரியை விட்டு வெளியே வந்த போதுதான் புரிந்தது அவரைப் பெற்ற பிள்ளைகள் கைவிட்டாலும் தோழமைகளும் மாணவர்களும் கடைசிவரை கூட இருந்தார்கள். இருப்பார்கள் என்று...

❑

# ஐப்பசியில்...

இயற்கையின் கொடையாம்
இளமைத் தவிப்பாம்
இனவிருத்திக் கலப்பாம்
வாலிபக் கனவை ஒதுக்கி
அன்னை அக்கா தங்கை
என்று உழைத்து ஓடாகி
முப்பது தாண்டியும்
தினவெடுக்கும்
உடற்பசி தீர்க்கானாகிச்
சகோதரியருக்காய்
துணைதேடும் பயணம்...

ஒத்த எண்ணமில்லை
சொத்து ஏதுமில்லை
சொந்தமாய்த் தொழிலில்லை
இருபக்க இழுத்தடிப்புகளில்

சோடி சேர்ப்பில்
இழுபட இழுபடத்
தங்கையரும் அக்கையும்
தவிக்க...

ஓர்வழியின்றி
அவர்க்காய் அன்றி
அவன் தனக்காய்
இன்று துணை தேடி
அதே இழுபறியில்...

நாப்பது தாண்டியும்
ஆண்டு தோறும்
ஆவணி தாண்டிய
ஐப்பசியில்
வாய்ப்புகளை
உவப்பில்லை வனப்பில்லை

தரமில்லை தராதரமில்லையெனத்
தட்டிக் கழிப்பதுமாய்...

சாதி பார்த்து ஒதுக்கியும்
சாதியிலும்
உயர்வு தாழ்வு பார்த்தும்
தோதாய்த் தனக்கென
கன்னி ஒருத்தியை வேண்டி
இன்னொரு ஐப்பசியின்
வரவிற்காய் காத்திருப்பது
எப்பசிக்காய்...

நன்றி: வளரி ஆடி 2021

அழ. பகீரதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மாணவியின் நாடக விமர்சனம் :

# வெண்கட்டி வட்டம்

அ. ஹரிநந்திகா

எமது பாடசாலையில் 2016.10.20 அன்று குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டதும் பராக்கிரம நிரியல்ல அவர்களால் நெறியாள்கை செய்யப்பட்டதுமான பேட்டோல் பிறெக்ட்டின் வெண்கட்டி வட்டம் எனும் நாடகம் எமது பாடசாலையில் இடம்பெறப்போவதான அழைப்பிதழ் பாடசாலையில் கிடைத்தது. அதைப் பார்த்ததும் தோன்றியது நான் தரம் 7இல் இருந்து எனது நாடக பாடக் கொப்பிகளிலும் பரீட்சைத்தாள்களிலும் அடிக்கடி காணப்படுபவர்களின் பெயர். நிச்சயமாக இவர்களைப் பார்க்க வேண்டும் என்ற ஆர்வம் மனதில் எழுந்தது.

'எமது பாடசாலையில்... நாடகத்திற்காக இடம் கொடுக்கிறார்களா? என்ற எண்ணமும் எழுந்தது. நிச்சயமாக அது எமது புதிய அதிபர் 'சிஸ்ரர்



ஜனநாயகி வருகைதான் காரணம் என்று புரிந்தது. ஏனென்றால் ஒரு சந்தர்ப்பத்தில் கொழும்பு றோயல் கல்லூரியால் நடாத்தப்படும் நாடக போட்டிக்காக எமது பாடசாலையை கேட்ட சந்தர்ப்பத்தில் எமது முன்னாள் அதிபர் மறுத்துவிட்டார். நான் பங்குபற்றிய தொடக்கத்தில் எமது பாடசாலையிலேயே இடம்பெற்றது. திடீரென மறுக்கப்பட்டது, காரணம் நாடகத்திற்காக வருபவர்கள் குப்பை போட்டுச் செல்வார்களாம் என்ற பதிலும் கிடைக்கப் பெற்றது. இத்தகைய எண்ணத்துடனும் நாடகம் பார்க்கும் ஆவலுடனும் அன்று 01 மணியளவில் எமது கேட்போர் கூடத்திற்கு ஓடிச்சென்றோம். அங்கு ஏனைய பாடசாலை மாணவர்களும் வருகை தந்தவண்ணம் இருந்தனர். அதிபர் ஆசிரியர்கள் முன்னாலும் மாணவர்கள் பின்னாலும் அமர்ந்தவண்ணம் இருந்தார்கள். அப்போது எனது நண்பியும் எமது அதிபரின் பெறாமகளுமான 'பெப்சி என்னைக் கண்டதும் முன்னால் இருந்து வந்து கூறினாள்: ஹிருத்தியா, அன்ராக்குப் பின்னால் இடம்பிடிச்சு வச்சிருக்கிறன் இரண்டு பேருக்கும்"

அப்ப நாங்கள் 8 பேர் வந்திருந்தம். அதால 'இல்ல பெப்சி, நடுவில இருப்பம். இதுல இருக்கவும் நல்லாத் தெரியுது தானே. இதில எண்டா எல்லாரும் இருக்கலாம்' என்று கூறி அவளையும் எனக்கருகிலேயே அமர்த்தினேன். இந்த இடத்தில் நான் பெரும் பிழை விடுகிறன் என்று நாடகம் தொடங்கும் வரை தெரியாது. நாடகம் ஆரம்பமானது.

ஆரம்பத்தில் சீலன் அண்ணா (அப்போது அவர் யாரென்றே தெரியாது. இப்போது அவரின் நாடகக் குழுவில் நானும் பகுதிநேர ஆற்றுகையாளர்) பொட்டொளியில் தென்பட்டார். வணக்கம் கூறி நாடகத்தை ஆரம்பித்தார். மேடையில் சற்று ஒளி பரவியது. அப்போது எமது கண்ணுக்கு அந்த மேடையில் உள்ள மேடைப் பொருட்கள் முதற்கொண்டு வேட உடை ஒப்பனை அனைத்துமே எமக்கு புதிதாகவும் வித்தியாசமாகவும் இருந்தது. ஏனெனில் அன்றுதான் நான் இப்படி ஒரு மொழிபெயர்ப்பு நாடகத்தைப் பார்த்தேன். ஆரம்பத்தில் அனைவருமே அமைதியாகத்தான் இருந்தார்கள். சீலன் அண்ணா பாடலுடன் பாத்திர அறிமுகத்தின் ஊடாக நாடக கதையையும் கூறத்தொடங்கினார். நடு மேடையில் இருந்த சீலனண்ணா இடது மேடைக்குச் சென்று உடுக்கை எடுத்து வாசித்தவண்ணமே பாடினார். அருகில் இருந்த நண்பி "சூப்பரடி எப்படி நடிச்சிட்டே உடுக்கும் அடிச்சிட்டுப் பாடுறார்!' அப்போது எமக்குத் தெரியாது அந்த நாடகத்தில் இருந்த இசைக்கருவிகளை வாசிப்பவர்கள் அந்த நாடகத்தின் முக்கிய பாத்திரங்களை ஏற்று நடிப்பவர்கள் என்று...

சைமன் சசாவா (கதாநாயகன்) பாத்திரம் நடிப்பவர்கூட ஆரம்பத்தில் இசைக்கருவி வாசித்தவண்ணம் காணப்பட்டார். தனது கட்டம் வர தலையில் தொப்பியைப் போட்டுக்கொண்டு இசைக்கலைஞராக இருந்தவர் நடிகனாக மாறும் தருணத்தைப் பார்த்தோம். ஆச்சரியமாகத்தான் இருந்தது. அந்த வேளையில் பாடல் எமக்குக் கேட்காமல் கோரஸ்சும் கருவிகளின் ஒலி மாத்திரமே கேட்டது. ஆம் இங்குதான் எமது கெட்டகாலம் ஆரம்பமாகிறது. எமக்கு எதுவும் கேட்கவில்லை. அதனால் மாணவர்களிடையே சற்றுச் சலனம் ஏற்பட்டது. சலனத்திலும் நாடகம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. கோரஸ் மாத்திரம் என்றாலும் கேட்டது. தற்போது அதுவும் கேட்கவில்லை. முதலாவது தடவையாக நாடகம் நிறுத்தி சீலனண்ணா அமைதியாக இருக்கும் படியும் எங்களிடம் ஒலிவாங்கி இல்லாத காரணத்தினால் அனைவரும் அமைதியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தால் மாத்திரமே நாடகம் நடிக்கமுடியும். உங்களால் கேட்கவும் முடியும் என்று கூற மயான அமைதி. நாடகம் தொடர்ந்தது. மிகவும் அருமையான நடை. ஆடல் அனைத்துமே கண் இமைக்காமல் பார்க்கத் தூண்டியது. இந்த வேலையில் மறுபடியும் சின்னதாக சத்தம் வரத் தொடங்கியது. குறூசா சைமனை சந்தித்த கட்டம் இடம் பெற்றது. இருவரின் நடிப்பும் அவர்கள் காதலிப்பதை உணர்த்தியது. அந்த தருணம் மாத்திரம் ஒரு அமைதி... அப்போது நித்தி அக்காவின் (நட்டெல்லா) உரையாடல் இடம்பெற்றது... அவரின் குரல் மாத்திரம் அந்த சலனங்களிற்கு மேலாக கணீரென எமது காதை வந்தடைந்தது. அவரது பாத்திரம் அவர் மேல் கோபம் வரவே வைத்தது. இப்படி ஒரு அம்மாவா? பேராசைக்காறி என்று எண்ண வைத்தது. இதுவே அவர் ஏற்ற பாத்திரத்தின் பெரும் வெற்றியாக எண்ணுகிறேன். மறுபடியும் சலனம் கூட ஆரம்பித்தது. மறுமுறையும் இடம்பெற்றன. அதில் எம்மைக் கேட்டார்கள். உங்களுக்கு பிடித்த ஒரு பாத்திரத்தைக் கூறுங்கள் என்று. என்னை அன்று மிகவும் கவர்ந்த பாத்திரம் அசட்டு நீதிபதிதான். அப்படி என்னைக் கவர்ந்தது அந்தப் பாத்திரம். CD வாங்கினார். அவரிடம் இருந்து நான் வாங்கி எனது கணனியில் ஏற்றிப் பார்த்தேன். அப்போது அனைத்தும் வடிவாக விளங்கியது. அனைத்து நடிகர்களும் சிறப்பாக நடித்திருந்தார்கள். ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் இல்லை என்பது புரிந்தது. நாடகத்தில் அனைத்துமே திறமாக இருந்தது. காட்சி மாற்றங்கள் பாத்திர மாற்றங்கள் ஒலி, ஒளி அனைத்தும் சிறப்பாகவும் ஆச்சரியமாகவும் இருந்தது. அன்று முதல் இன்று வரை இந்த நாடகத்தை 50 தடவைகளேனும் பாத்திருப்பேன். மறுநாள் பாடசாலையில் நாடக பாடவேளை வெண்கட்டிவட்டம் நாடகக் கதையையும் அதில் உள்ள சுவாரஸ்யங்களுடன் கூறினேன். அப்போது




நாடகம் நிறுத்தப்பட்டது. இவ்வாறு ஐந்து முறை நாடகம் நிறுத்தப்பட்டு இறுதியாக சீலனண்ணா நாடகம் பார்க்க விரும்பாதவர்கள் வெளியே செல்லலாம் என்று கூற சிலர் எழுந்து சென்றார்கள். கேட்போர் கூடக் கதவும் மூடப்பட்டது. நாடகம் தொடர்ந்தது. அப்போது கலவரக் கட்டம் இடம்பெற்றது. சைமனும் குறூசாவும் பிரியும் சந்தர்ப்பம். அது நிச்சயமாக அந்தப் பாடல் என்னைக் கவர்ந்தது. உனக்காக நான் காத்திருப்பேன் அருமையான பாடல் அதன் இசை, வரிகள் அனைத்துமே அருமை. இவ்வாறு அனைத்து பாடல்களுமே என்னைக் கவர்ந்தது. இதற்கிடையில் எனது நண்பியின் காதலன் எதிர்வரிசையில் இருந்து இருவரும் தாம்தான் என்று எண்ணி ஒருவரை ஒருவர் நோக்கி சிரித்த வண்ணம் இருந்தார்கள்... இப்படி சில வேடிக்கையான விடயங்களும் அன்று நிகழ்ந்தது. ஒரு வழியாக நாடகம் முடிவடைந்தது. கதையின் கரு விளங்கியது. ஆனால் பேசிய வசனங்கள் அரை குறையாகவே விளங்கியது. இறுதியாக பார்வையாளர்களின் நாடக விமர்சனங்கள் அனைவருமே கவலைப்பட்டோம் இன்னுமொருமுறை அந்த நாடகத்தை பார்க்க முடியாதா என்று... அன்று முதல் இன்று வரை நான் எனது ஆவணப்படுத்தல் fileஇல் இந்த அழைப்பிதழையும் நடிகர்களின் புகைப்பட அட்டையையும் பத்திரமாக வைத்திருந்தேன்.

2017.11.11 திகதி யாழ்ப்பாணம் திருமறைக்கலா மன்றத்தில் இடம்பெற்ற நாடகப்பட்டறையில் சீவரத்தினம் ஐயாவைச் சந்தித்தேன். அவர் உடனேயே எனது நினைவுக்கு வந்தார். குறாசாவைத் திருமணம் செய்யும் கிழவனாக நீங்கள் தானே நடித்தீர்கள் என்று வினவி அவரிடம் கதைத்தேன். அவர் சாரங்கனைக் காட்டி இவரும் அந்த நாடகத்தில் நடித்தார் என்று கூறினார். அன்று அறிமுகமானவர்கள்தான் இவர்களுடன் கதைப்போமா என்று ஏங்கியதும் உண்டு. இன்றுவரை அவர்களுடன் இணைந்து நடிப்பதற்கான வாய்ப்பையும் அவர்களை அறிந்து பழகி அவர்களிடம் இருந்து பல்வேறு பயிற்சிகளையும் நாடகம் சார்ந்து பல்வேறு அனுபவங்களையும் பெற்றுத்தந்தது அந்தச் சந்திப்பு. ❐

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# நெடுங்கேணி வெடுக்குநாறி மலைக் குகைகள்

இலங்கையின் வட மாகாணத்தின் சில முக்கியமான இடங்களைப் பார்க்கும் வாய்ப்பு அண்மையில் கிடைத்தது. அவற்றில் ஒன்று வவுனியா மாவட்டத்தின் வடக்கிலே முல்லைத்தீவு மாவட்டத்திற்கு மிகவும் அருகிலே இருக்கின்ற, நெடுங்கேணிப் பிரதேசத்தில் உள்ள பெரிய பாறைகளால் ஆன சிறிய குன்றுப் பகுதியான வெடுக்குநாறி மலையாகும்.




வெடுக்குநாறி என்பது ஒரு வகையான மரத்தின் பெயராகும். அதாவது, வெடுக்கு மணம் வீசும் அந்த மரத்தின் பூவின் காரணமாக இப் பெயர் அமைந்திருக்கலாம் எனச் சொல்லப்படுகின்றது. இப் பகுதியில் அந்த மரங்கள் அதிகமாக இருந்ததனால் இப்பிரதேசமும் அப் பெயரால் அழைக்கப்பட்டிருக்கலாம். ஏனெனில், வன்னிப் பிராந்தியத்தில் மரங்களின் பெயர்கள் அனேகமான ஊர்களின் பெயர்களோடு இணைந்துள்ளன. உதாரணமாக, முல்லைத்தீவு - முல்லைக் கொடியின் பெயரையும், கிளிநொச்சி - நொச்சி மரத்தின் பெயரையும், மாங்குளம் - மா மரத்தின் பெயரையும், புளியங்குளம் - புளிய மரத்தின் பெயரையும் தமது பெயருடன் இணைத்துள்ளன.

இப் பகுதியில் எம்மை ஆச்சரியத்துக்கு உள்ளாக்கும் பல விடயங்கள் பரவலாகக் காணப்பட்டன. அவற்றில் முக்கியமானவை ஆரம்பத்தில் வரவேற்கும் முகமாக சிறிய மேடான நிலத்தில் அமைந்திருந்த அகலமானதொரு குகையாகும். இதன் முகப்பின் மேற் பகுதியில் பெயர்ப் பலகை போன்று, ஒரே வரியில் கற் பாறையின் மீது பெரிய எழுத்துகள் வெட்டப்பட்டுள்ளன. அக் குகையின் உட் பகுதியில் நிலத்திற்குக் கீழாகச் சிறிய சுரங்கம் ஒன்று அமைந்திருப்பதையும் அவதானிக்கக்கூடியதாக இருந்தது.



அதன் அடுத்த பக்கத்தில் பெரிய பாறை ஒன்றின் மேல் இன்னொரு சிறிய பாறையை இணைத்து உருவாக்கியது போன்ற இன்னொரு குகை அமைந்திருந்தது. அதற்குள் பல இந்துமத மற்றும் கிராமிய வழிபாட்டுக்குரிய தெய்வங்களின் உருவங்களை வைத்து, அப் பகுதி மக்கள் வழிபட்டு வருவதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றைத் தாண்டிச் சிறிது தூரத்தில் பிரதான குன்றுடன் இணைந்ததாக இருந்த சற்றுப் பெரிய பாறை ஒன்றின் சம தளமான மேற்பரப்பில் சுமார் எட்டு அடி நீளமும் நான்கு அடி வரை அகலமுமான, கால் பாதத்தின் வடிவத்தில் பாறையைக் குடைந்து உருவாக்கப்பட்ட, எட்டு அடிவரை ஆழமான நீர் தேங்கிய சிறிய கிணறு ஒன்று காணப்பட்டது.



அதற்கு அருகில் இருந்த பாறைகளில் இயற்கையாக உருவானதோ அல்லது செயற்கையாகக் குடையப்பட்டு உருவாக்கப்பட்டதோ என்ற சந்தேகத்தைத் தோற்றுவிக்கும் வகையில், முன் பகுதி மண்ணாலோ அல்லது செங்கட்டி -களாலோ மறைக்கப்பட்டு இருந்திருக் -கக் கூடியதான பெரிய குகை ஒன்றும் சிறிய குகை ஒன்றும் காணப்பட்டன.

இவற்றில் சுவரால் பாதுகாக்கப்பட்ட உட் பகுதிக்கும் வெளிப் பகுதிக்கும் இடையிலான வேறுபாடு இன்றும் தெளிவாகத் தெரிகின்றது.




எந்தவொரு பிரதேசத்தினதோ, இனத்தினதோ வரலாறு எப்போதும் ஒரே நேர்கோட்டில் செல்வதில்லை.

ச. தனுஜன்

# ஒரு பயணக் குறிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து இவற்றுக்கு அருகில், இன்னும் கொஞ்சம் உயரமாக இருந்த அடுத்த பாறையில் ஏறியபோது, அங்கே இலிங்க வடிவமுடைய ஒரு 15 அடி வரை உயரமும் 6 அடி வரை அகலமுமான பாறை செங்குத்தாக நிமிர்த்தி வைக்கப்பட்டு இருந்தது. அதை அப் பகுதி மக்கள் ஆதி லிங்கம் எனக் குறிப்பிடுகின்றனர். ஒரு குன்றின் உச்சியில் இத்தனை ஆண்டுகள் இப் பாறை உறுதியாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள பொறிமுறை வியக்க வைத்தது.



அதற்கு அருகில் உயரமாகவும் பெரியதாகவும் இருந்த பிரதானமான பறையின் மேற்பகுதி தட்டையாக அமைந்திருந்தது. அதில் அப்பகுதி மக்கள் வழிபடுகின்ற, அண்மையில் வைக்கப்பட்ட பீடத்துடன் கூடிய சிறிய சிவலிங்கமும், திரிசூலமும் காணப்படுகின்றன. ஒரு கரப்பந்தாட்ட மைதானம் அளவான இம் மேற் பரப்பில் முழங்கை அளவு ஆழமான சிறிய குழி ஒன்றும் உள்ளது.



இவை எம் கண்ணில் தென்பட்டவை. இன்னும் பல ஆச்சரியங்கள் இக் காட்டுப் பகுதி முழுவதும் விரவிக் காணப்பட வாய்ப்புள்ளது.

இக் குகைகளின் உருவாக்கம் கூடச் செயற்கையானதாக இருக்க வாய்ப்பிருப்பதாகச் சிலர் குறிப்பிடுவர். அவர்கள் இப் பாறைகள் இராவணன் காலத்தில் அசுர பலம் கொண்டவர்களால் அசைத்துக் கொண்டுவந்து வைக்கப்பட்டு, இவ் இலிங்க வழிபாட்டுத் தலம் உருவாக்கப்பட்டது எனவும் கருதுவர். அது கொஞ்சம் அதீத கற்பனை போலத் தோன்றினாலும், ஆய்வுக்குரியது.

இலங்கையில் லிங்க வழிபாடு மிகவும் புராதனமான காலத்தில் இருந்தே இடம்பெற்று வருகின்றமையை நாட்டின் பல்வேறு பாகங்களிலும் இருந்து கிடைக்கின்ற தொல்லியல் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.

இதையொத்த குகைகள் பலவற்றில் பௌத்த பிக்குகள் தங்கியிருந்து தமது மதக் கடமைகளை மேற்கொண்டமைக்கான ஆதாரங்களை நாம் தம்புள்ள போன்ற பிரதேசங்களில் காணக்கூடியதாக உள்ளது.

இப் பகுதி இன்று இலங்கை அரசின் தொல்லியல் திணைக்களத்தினரால் உரிமை கோரப்படுவதுடன், புராதன பௌத்த மத எச்சங்கள் இங்கு இருக்கலாம் எனவும் கருதப்படுகின்றது. இப் பகுதிக்கு அண்மையில் முல்லைத்தீவு குருந்தூர் மற்றும் புளியங்குளம் வடக்கு கஞ்சிரமோட்டை ஆகிய பகுதிகளில் பௌத்த சின்னங்கள் கண்டுபிடிக்கப்படுகின்றமையும் கருத்தில் கொள்ளத்தக்கது.

எந்தவொரு பிரதேசத்தினதோ, இனத்தினதோ வரலாறு எப்போதும் ஒரே நேர்கோட்டில் செல்வதில்லை. ஆரம்பத்தில் நாகம், லிங்கம் போன்ற இயற்கை வழிபாட்டுக்கும் தாய்த் தெய்வங்களான கொற்றவை, பத்தினி ஆகியவற்றுடன் முருகன், சிவன் ஆகிய தெய்வங்களை வழிபடுவதற்கும் அதிக முக்கியத்துவம் அளித்த தமிழ் மக்கள், இடைப்பட்ட காலத்தில் சமண, பௌத்த மதங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, பின்னர் சைவ வைஸ்ணவ மதங்களைப் பின்பற்றினர் என்பது வரலாறு.

அந்த வகையில், தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் இன்று கிடைக்கின்ற பௌத்த மத எச்சங்கள், கி.பி. 3 ஆம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி. 9 ஆம் நூற்றாண்டு வரையான எழுநூறு ஆண்டுகள் பௌத்த மதத்திற்கு மிகவும் முக்கியத்துவமளித்துப் போற்றிப் பேணி வந்த தமிழ்ப் பௌத்தர்கள் பயன்படுத்தியவையாக இருக்கவே அதிக வாய்ப்பு உண்டு.

எனவே, வரலாற்றை இன்றைய பின்னணியில் வைத்து, பௌத்த மதம் சிங்களவர்களுக்கு மாத்திரம் உரியது என்றோ, சைவம் இலங்கையில் தமிழர்களால் மாத்திரம் கைக்கொள்ளப்படுவது என்றோ நோக்கி, பண்பாட்டு வரலாற்றின் பன்மைத்துவத்தை மறுதலித்து நிற்பது அறிவுசார் வளர்ச்சிக்கு உதவாது.

அதேநேரம் இக் குன்றானது மிகவும் பாதுகாப்பான ஒரு மறைவிடமாகவும் சில சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கலாம்.

எப்படி நோக்கினாலும் எமது முன்னோரின் வாழ்வையும், எமது வரலாற்றையும் தன்னகத்தே வைத் திருக்கும் இத்தகைய புராதன இடங்கள் தொடர்பான அக்கறையும் ஆய்வுப் பார்வையும் எம் மத்தியில் வளர வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். □


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறுங்கதை

# கொரோனா நிவாரணம்

மாதவி உமாசுதசர்மா



"தயா அண்ணோய், தயா அண்ணோய்! இங்கை உங்களை விதானையார் வரட்டாம் .இண்டைக்கு நிவாரணம் தாறாராம்."

"என்னடா சொல்ற, எத்தின மணிக்கு எண்டு எதும் தெரியுமோ? என்ன மாதிரி..."

"என்னத்த அண்ணோய் சொல்லிறது, அவர் ஒண்டும் சொல்லேலை. அங்க சனம் நிறைஞ்சு நிக்குது, இப்பவே போனாத்தான் ஏதும் கிடைக்கும் போல கிடக்குது, அதான் உங்களிட்ட சொல்லிட்டு போவம் எண்டு வந்தனான் .வாறன்" என.

தயாவும், இன்னும் அந்த கிராமவாசிகள் பலரும் வரிசையில் காத்திருந்தனர். பலமணிநேரங்களுக்குப் பிறகு ஒருவர் வந்து பதிவெடுத்துவிட்டு நாளை வரச் சொல்லிவிட்டு போனார்.

"விதானையார் நாளைக்குத் தானாம் வருவாராம்...."

எல்லோரும் சலிப்போடு அளவளாவியபடி கலைந்து சென்றனர்.

"என்னப்பா, நிவாரணம் ஏதும் தந்தவையோ?" என வினவியபடி வந்தாள் கமலம், தயாவின் முகத்தில் தெரிந்த களைப்பை கண்டு மேற்கொண்டு கதையை வளர்க்காமல், "இஞ்சாரப்பா, கிணத்தடியில தண்ணி நிறைச்சு வைச்சிருக்கிறன். குளிச்சிட்டு வாங்கோ. என்ன" என்றபடி அடுப்பை மூட்டச் சென்றாள்.

அரை றாத்தல் பாண் துண்டையும், பிளேன் டீயையும் குடித்து விட்டுப் பிள்ளைகள் உறங்கச் சென்றார்கள்.

"இஞ்சாரப்பா, நாளைக்கு நிவாரணம் தந்திருவினம் தானே; பருப்பு, அரிசி ஏதும் தருவினம் எண்டு கவிதா அக்கா நேற்று கதைக்கேக்க சொன்னவா. இல்லாட்டி நாளைக்கு மட்டும் சமைக்க காணும் கிடக்கிற சாமான்."

கமலம் கூறியதைக் கேட்டு தயா யோசனையில் ஆழ்ந்தான். தினமும் ஆட்டோ ஓட்டி வரும் வருமானத்தில் தான் குடும்பம் நகர்கிறது. ரெண்டு மாதமா அதுக்கு உழைப்பில்லை. லீசிங் வேற கட்டோணும். .இப்ப சாமானும் வாங்க வழி இலாமக்கிடக்கு .இன்னும் எத்தின நாளுக்கு இந்தக் கொரோனா எங்கட வாழ்க்கைய முடக்கப் போகுதோ தெரியேல்லை..."

"நிவாரணம் தாரவையும் கூட்டத்தை கூட்டி வச்சுத்தான் தரீனம். விதானையார் எப்பவும் இப்பிடித்தான், ஒரு நாளில வேலைய முடிச்சுதரமாட்டேர், ஒரு கிழமையாவது இழுத்து அடிச்ச பிறகுதான் தருவார். ம்ம்.. இண்டைக்குத்தானே முதல் நாள், பதிவு மட்டும் எடுப்பினம், நாளைக்குக் கையெழுத்து வாங்குவீனம், அடுத்தநாள் லீவு எண்டு வர மாட்டினம், அடுத்தநாள் நாலு பேருக்குக் குடுப்பினம், எங்களுக்கு வர ஒரு கிழமை ஆகும்..."

"நான் எதுக்கும் எங்கட சந்திரன் மாஸ்டரிட்ட கடனா ஒரு ரெண்டாயிரம் கேட்டுப் பார்க்கிறன். நாளைக்கு விடிய போறன்..."

"கடன் கேக்கிறதில எனக்கு விருப்பம் இல்லையப்பா, அந்த மாஸ்டர் வட்டி போட்டெல்லோ தருவர்..."

"அதுக்கு என்ன செய்ய ஏலும், அந்த மட்டிலயாவது தருதே மனுஷன் எண்டு சந்தோசப்பட வேண்டியது தான்" என்றபடி உறங்கச் சென்றார்கள் தயாவும், கமலமும்.

இந்த அனர்த்த நிலைமையில் இவர்கள் மட்டுமல்ல இன்னும் பலரது தினப்படி வாழ்க்கை கேள்விக்குறியாகி உள்ளது.

சரியான நேரத்தில், சரியானவர்களுக்குக் கிடைக்க வேண்டியவை கிடைக்காத போது அவர்கள் கடனாளியாகின்றனர். அதிகாரத்தில் உள்ளவர்கள் நிலைமையை உணர்ந்து செயற்பட வேண்டும். ❐

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஐயகோ எனக்குக் கொரோனாவா?

என்.கே. கஜரூபன்



"நெஞ்சுக்க குத்திற மாதிரி இருக்கு!"

"அது வாய்வுக் குத்தா இருக்கும்"

மனைவியின் இந்த அலட்சியமான பதிலில் சண்முகத்திற்குப் பாதி வருத்தம் சுகமாகிவிடும்.

மனைவியின் இஞ்சித் தேநீரிற்குப் பிறகு ...

"இப்ப கொஞ்சம் சுகமான மாதிரி இருக்கப்பா!"

"நான் சொல்லேல்ல இது வாய்வுக் குத்துத்தான் இப்ப இஞ்சிக்குச் சுகமாப் போச்சு! பாத்தீங்களே அப்பா நீங்க வேற சும்மா சும்மா பயந்து கொண்டு..."

என்ற மனைவியின் இழுவையில் இன்னுங் கொஞ்சம் உற்சாகமாக வெளிக்கிளம்பும் சண்முகம் இன்று...

"எனக்குத் தொண்டை சாதுவா நோகிறமாதிரி இருக்கு"

"என்னப்பா சொல்லுறியள் முழுத் தொண்டையும் நோகுதே"

"இடப்பக்கமாகத் தான் நோகுது"

"இடப்பக்கம் நோகுதெண்டா, ஏதும் விழுங்கேக்க நோகுதோ? சும்மாவும் நோகுதோ"

என்று கேட்டபடி அருகில் வந்த மனைவி தனது இடக்கையால் தன் மூக்கையும் வாயையும் பொத்தியபடி வலக்கையால் 'ரோச்சு' லைட்டை அடித்தபடி

"எங்க வாயை ஆவெண்டுங்க பாப்பம்" என்ற பொழுது அவளது அக்கறையை விட அவள் காட்டிய சுயபாதுகாப்பில் நொருங்கிப் போனான் சண்முகம்.

"ஆ.....! ஏதும் வித்தியாசமாத் தெரியுதே?"

"இடப்பக்கமா கொஞ்சம் சிவந்திருக்கப்பா! உங்களுக்குக் காய்ச்சல் காயுதே?"

என்றபடி கழுத்தைத் தொட்டுப் பார்த்தவள். உடனடியாக பாத்ரூமுக்குப் போய் 'சோப்' போட்டுக் கைகழுவி மீண்டபொழுது, சண்முகம் சற்று ஆடித்தான் போய்விட்டான்.

இப்பொழுது அவனுக்கு தொண்டை முழுவதும் வலிப்பது போலிருந்தது. மாரடைப்பின் முன்னறிகுறியான நெஞ்சுக்குத்தை அலட்சியம் செய்தவள், இப்பொழுது சாதாரணமாகத் தான் கருதிய தொண்டைநோவை அதிக சிரத்தை எடுத்து விசாரித்ததும், தானே வைத்தியராக மாறித் தொண்டையைச் சோதித்ததும், அச்சோதனையின் போது தன்னுடைய மூக்கு வாயைப் பொத்தியபடி பார்த்ததும், உடனடியாக கைகழுவியதும் என்னவோ போலாயிற்று!

"தனக்குக் கொரோனாவா? அது எப்படி வந்திருக்கும்? கொரோனாதான் என்றால் இனித் தனிமைப் பட வேண்டுமா? ஊரடங்கால் குடும்பத்தோடு இணைந்திருக்க நல்ல வாய்ப்புக் கிடைத்துள்ளதென்று மகிழ்ந்ததெல்லாம் வீணாயிற்றா? இந்த வாழ்க்கை, எனதருமைப் பிள்ளைகள், மனைவி எனது வேலை, நட்புக்கள், பிறகு வாசிப்பமென்று வாங்கி வைத்த புத்தகங்கள், பெரிதாய்ப் பார்க்க என்று கட்டுக் காசில் வாங்கிய 60" TV , துல்லியமாய்ப் படம் பார்க்கவென்றே வாங்கிய "புளு றே" சீடி பிளேயர், ஆசையா வாங்கி வைச்சு ஓடாம சேவிஸ் போட்டு வைச்ச புது மோட்டார் சைக்கிள் இன்னும் என்னென்னவோ எல்லாம் விட்டுவிட்டுத் தனிமைப் பட வேண்டுமா? உண்மையில் கொரோனா என்றால் அம்புலன்ஸில் ஏற்றி அங்கோட வைத்தியசாலைக்கு அனுப்புவினமாமே! ஐயோ பிறகு ஆரும் வந்து பார்க்க ஏலாதென்றார்களே! மரணித்தால் பிணத்தைக் கூடக் கொடுக்காம மருந்தடிச்சுத் தாட்டு விட்டிருவினமாமே வெளிநாடெல்லாம் அப்படித்தான் செய்வதாக முகநூலில் செய்தி பார்த்தோமே ! ஐயகோ!"

சண்முகத்திற்குத் தலை சுற்றுவது போலிருந்தது. அப்படியே அருகிலிருந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்தார் எல்லோரும் குசினியில் நின்று குசுகசுத்துக் கதைப்பது தெரிந்தது. சண்முகத்தின் மாமி, தன் மகளிடம்

"நீ போய்ச் சொல்லு!"

என்று கூறுவது சத்தமாகக் காதில் விழுந்தது. சற்றைக் கெல்லாம் மனைவி விறாந்தைக்கு வருகிறாள். குசினிக் கதவின் உள்ளே உடல் மறைத்தபடி வெளியே எட்டி, ஏதோ விநோத ஜந்தைப் பார்ப்பது போல சண்முகத்தின் மாமி பார்த்துக் கொண்டிருந்தார். பிள்ளைகளைக் காணவில்லை. அவர்கள் குசினிக்குள் மறிக்கப்பட்டிருக்க வேண்டும்.

சண்முகம் அளவற்ற அன்பானவள் என்று கருதிய மனையாள் கைகேயியாக, வருவதை அறியாத சண்முகம் அவள் வாய்திறந்ததும். அதனை அறிந்து கொண்டான்.

"அப்பா! சொல்லுறனெண்டு குறை நினைக்காதீங்கோ, நீங்கள் வெளியில எல்லாம் போய் வாறனீங்கள், வீட்டில சின்னப் பிள்ளையளும் இருக்குது, அம்மாவும் வயசானவா, நீங்கள் அந்த மாஸ்க்கை எடுத்துப் போட்டுக் கொண்டு உங்கடை அறைக்குள்ளேயே இருங்கோ. சாப்பாடு, சோப்பு, துவாய் எல்லாம் வேறயா வைச்சிருங்கோ, ஒரு பதினான்கு நாளைக்கு பல்லைக் கடிச்சுக் கொண்டிருங்கோ!"

சண்முகத்தின் மனைவி சொல்லச் சொல்ல சண்முகத்துக்கு பூமி காலடியில் நழுவுவது போல இருந்தது. ஏனென்றால் ஊரடங்குச் சட்டம் மாலை 6 மணிக்கென அறிவித்ததும், யாழ்ப்பாண நகரில் உள்ள நான்கைந்து கடைகளுக்கு ஏறியிறங்கி வீட்டில் உள்ள எல்லோருக்கும் தேவையான தெல்லாம் வாங்கி வந்தவன். அவன் போனபொழுது எல்லாக் கடைகளிலும் கூட்டம் அதிகமாக இருந்தது.

"எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருந்ததோ? எந்தக் கடையில் எந்தத் தொற்றாளர் நின்றாரோ? ஐயகோ! அப்ப எனக்கு வந்த தொண்டை நோ கொரோனாவின் அறிகுறியோ? என்ர செல்வச்சந்நிதியானே "

சண்முகத்தின் வாயில் இந்த வார்த்தைகள் பிறக்கவில்லை. ஆனால் அவன் மனம் பிதற்றியது. அவன் இமைக்க மறந்தவனாய் எங்கோ வெறித்துப் பார்த்தபடி நின்றுகொண்டிருந்தான்.

"அப்பா யோசியாதைங்கோ மாஸ்க்கைப் போடுங்கோ!"

மீண்டும் மனைவி அவனை உலுப்ப கண்ணிமைத்தவனாய்த் திடுக்குற்று அவளைப் பார்த்தான். அவளைப் பிழை சொல்ல முடியாது. அவள் சொல்வதிலும் ஒரு நியாயம் இருந்தது.

"பிள்ளையளுக் கொண்டென்றால் என்னால தாங்க முடியாது. எனக் கொண்டென்றால் இந்த வீட்டின்ர நிலைமை என்ன? என்ர அம்மாவும் 'ஹார்ட்' வருத்தக்காறி வயசு போனவா. அவவின்ர பாதுகாப்பும் முக்கியம். பிள்ளையளுக் கேதுமெண்டால்.... நீங்க தாங்குவியளோ?"

காதுகளில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றியது போல் இருந்தது, சண்முகத்திற்கு, அவள் நீட்டிய 'மாஸ்க்கை' கையில் வாங்கியவனாய் அவனது அறைக்குள் போய்க் கதவைச் சாத்திக் கொண்டான்.

"இனி என்ன செய்யிறது? பேசாமப் பெரியாஸ்பத்திரிக்கே போய்க் காட்டுவமா? வீட்டில இருக்கிறதை விட அங்க போறது நல்லந்தானே?"

இப்பொழுது சண்முகம் வாய்விட்டுப் பேசுகிறான். அவனது வார்த்தைகள் முடியமுன் மனைவி,

"என்னப்பா சொல்லுறியள், பெரியாசுப்பத்திரிக்குப் போனா உங்களை மறிச்செல்லே போடுவாங்கள்"

"அதுக்காக ஆசுப்பத்திரிக்குப் போகவேண்டாமெண்டு சொல்லுறியோ? வருத்தம் முத்தினாப் பிறகு என்ன செய்யிறது? நான் பெரியாசுப்பத்திரிக்குப் போறதுதான் உங்களுக்கும் நல்லது."

என்று கூறியபடி "நானொருக்கா 'வோஸ்ரூம்' போகோணும்" என்று வெளியில் சண்முகம் நடக்க அவன்மீது அதிக நேசத்துடன் நடந்து கொள்ளும் கடைசி மகள் ஏழே வயதானவள். சாதாரணமாக நடந்து வந்தவள், மூன்றடி பின்னே போய் ஓரமாக ஒதுங்கி நிற்கிறாள்.

"நல்ல வகுப்பெடுப்பு, வஞ்சகமில்லாப் பிள்ளை கூட இப்படி மாறிவிட்டதே? நேற்று இப்படிப் போகும்போது ஓடி வந்து கால்களைக் கட்டிக் கொண்டாளே 'விடம்மா அப்பா அவசரமா வோஸ்ரூம் போறன்.' என்று என்னை விடுவித்துக் கொண்டு போனேனே அந்தப் பிள்ளை கூட ஒதுங்கி நிற்கிறதே! நான் தொண்டை நோகுதென்று வெளிப்படையாகச் சொல்லியிருக்கக் கூடாதோ?"

சண்முகத்தின் மனம் பலவாறாய்த் தடுமாறியது.

"இஞ்சேருங்கோ அப்பா நீங்க யாழ்ப்பாணம் பெரியாசுப்பத்திரிக்குப் போனாத் தொற்றுநோய் 'வாட்டில்' தான் விடுவாங்கள். அங்க ஏற்கனவே இருக்கிற ஆட்களிட்ட உண்மையான வருத்தம் இருக்கோ தெரியாது. அதை வாங்கிக் கொள்ளப் போறியளே? இது ஒரு தொண்டை நோத்தானே. வீட்டில அறைக்குள்ள தனிமைப்பட்டிருக்க உங்களுக்கேலாம இருக்கோ?"

மனைவியின் பாசம் கண்டு சண்முகம் சிறிது சந்தோசமடைந்தாலும் அது நிலைக்கவில்லை!

"மற்றதப்பா, நீங்கள் ஆசுப்பத்திரிக்குப் போய் கொரோனாச் சந்தேகநபராக 'அட்மிட்' ஆகினா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த கட்டம் வீட்டில மருந்தடிச்சு நாங்களும் சுய தனிமைப்படுத்தலுக்குட்பட வேணுமெண்டு PHI காரர் பொலிஸோட வீட்ட வந்திடுவாங்கள்"

"ஓ...! அதோ சங்கதி அப்ப உண்மையான பாசத்தில மறிக்கேல்ல"

சண்முகத்தின் 'மைன்ட் வோய்ஸ்'

"சே ! அவள் சொல்லுறதில என்ன பிழை? ஏன் நான் இப்பிடி நினைக்கிறன் கடவுளே"

சண்முகத்தின் மனச்சாட்சி 'பல்டி' அடித்தது.

★ ★ ★

வேப்பங் கொழுந்தும் மஞ்சளும் அரைத்துத் தின்று, பத்துவருடம் நல்லெண்ணை வைக்காத தலைக்கு நல்லெண்ணை வழிய வழிய வச்சு முழுகி என உள்ள கைவைத்தியம் எல்லாம் செய்து பார்த்து, மூன்று நாட்களின் பின் ஒரு அதிகாலைப் பொழுது ...

"அப்பா... அப்பா..."

"ம்...."

"தொண்டைநோ எப்பிடி இருக்கு?"

"குறைஞ்சிருக்கிற மாதிரி இருக்கு!"

"காய்ச்சல் குணம் ஏதுமிருக்கே?"

"இல்லை"

"எதுக்கும் நாங்க வழமையாக் காட்டுற 'டொக்டரின்ர' நம்பருக்கு ஒரு 'கோல்' எடுத்துக் கேளுங்கோவன்."

"ஆரு சேனாதி 'டொக்டருக்கே?'"

"ஓம்"

"இந்த விடிய வெள்ளணவே?"

"அதுக்கென்னப்பா டாக்குத்தர்மார் நேரங்காலம் பார்க்காமப் பணிசெய்யிற தெய்வங்களெல்லோ! நீங்க 'கோல்' எடுத்துக் கேளுங்கோ அவர் ஒண்டும் சொல்ல மாட்டேர்"

"சரி"

என்றபடி, தனது கைத்தொலைபேசியை எடுத்து வைத்தியர் சேனாதிக்கு அழைப்பை எடுத்தான் சண்முகம்.

"நீங்கள் இந்த தொலைபேசி அழைப்பை எடுக்கும் போது எந்த இடத்தில் இருக்கிறீர்கள்? வீட்டிலா அல்லது பாதுகாப்பான ஒரு இடத்திலா? இந்த சந்தர்ப்பத்தில் உங்களுக்கு அருகில் ஒருவர் அல்லது பலர் இருக்கிறார்களா? இருந்தால் நீங்களும் அவர்களும் பாதுகாப்பற்ற நிலையில் இருக்கலாம்! கொரோனாத் தொற்றை ஒழிப்பதற்கு அரசாங்கத்தின் ஆலோசனைகளைக் கண்டிப்பாகக் கடைபிடியுங்கள்."

வைத்தியரின் மொபிற்றல் இலக்கத்துக்கு அழைத்த பொழுது இந்த அறிவிப்பை சண்முகம் 'அவுட் ஸபீக்கரில்' விட்டு, வீட்டிலுள்ளோர் அனைவரையும் கேட்க வைத்தான்.

வைத்தியரிடம் பதில் இல்லை.

சலிப்போடு தொலைபேசியை கீழே வைத்தான் சண்முகம் .

வைத்த மறுகணம் மீண்டும் ஒலித்தது தொலைபேசி!

"டொக்டர் தான்"

"ஹலோ Mr. சண்முகம் , எப்படிச் சுகமா இருக்கிறீங்களா?"

"சுகத்தைப் பற்றித்தான் டொக்டர் Call எடுத்தனான்"

"என்ன கொரோனாவோ? ஹாஹ்... ஹஹ்... ஹா!"

"உங்களுக்கு எப்பவும் பகிடிதான் டொக்டர். உண்மையில் கொரோனாப் பயத்திலதான் Call எடுத்தனான்"

"கொரோனாவைப் பற்றி என்ன சந்தேகம்? TV ரேடியோ, தொலைபேசி எல்லாத்திலயும் சந்தேக நிவாரணம் வழங்கப்படுகுதுதானே. அதுக்கு மேல என்ன சந்தேகம்?"

"எனக்குத்தான் டொக்டர் ஒரு தொண்டைநோ!"

"அதுக்கு இப்ப என்ன? இது சாதாரண வருத்தந்தானே!"

"இல்ல டொக்டர் வீட்டில எல்லாரும் பயப்பிடுகினம். அதுதான்...!"

"சரி உங்கட வழிக்கே வாறன். உங்களுக்கு சளி இருக்கோ?"

"இல்ல டொக்டர்!"

"காய்ச்சல்?"

"இல்ல டொக்டர்!"

"தலையிடி, தலைச்சுத்து ஏதும் இருக்கோ?"

"இல்ல டொக்டர்"

"இருமல் இருக்கோ சண்முகம்?"

"இல்ல டொக்டர்!"

"சரி, வாசனை வேறுபாடு தெரியுதோ?"

"ஓம், டொக்டர் தேசிக்காய் மணம் தேயிலை மணமெல்லாம் வேறுபாடு தெரியுது, ஏனெண்டா இப்பதான் தேசிக்காய் பிழிந்த தேநீர் வீட்டில் தயாரிக்கப்படுகிறது."

"உடம்பு சோம்பலா இருக்குதா? தசை நோவுகள் அல்லது மூட்டு வலிகள் மற்றும் சுவாசிப்பதில் சிரமம் ஏதாவது?"

"நீங்கள் கேட்ட ஒரு அறிகுறியும் இல்ல டொக்டர், ஆனா தொண்டை மட்டும் இடப் பக்கமாகக் கொஞ்சம் நோகுது!"

"பயப்பட வேண்டாம் சண்முகம் உங்கள் அறிகுறிகளைப் பார்க்கும் போது சாதாரண "ரொன்சில்ஸ்" பிரச்சினைதான் உங்களுக்குக் கதைக்கும் போது குரலடைக்குதோ?"

"இல்ல டொக்டர்! நல்லா கத்தக்கூட முடியுது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரலில ஒரு பிரச்சினையும் இல்ல"

"அப்ப பயப்பிட ஒன்றுமில்ல சண்முகம் எதுக்கும் நீங்க வீட்டிலயும், வெளியிலயும் 'மாஸ்க்' போட்டுத் திரியுங்க. உப்புத் தண்ணியால வாய் கொப்பளிங்க, இளஞ் சுடுதண்ணியை அரைமணித்தியாலத்துக்கொருக்காக் குடியுங்க, கைகளை அடிக்கடி சவர்க்காரமிட்டு 20 - 30 செக்கன் உரஞ்சிக் கழுவுங்க. "

"டொக்டர்..."

"என்ன சண்முகம்"

"மூன்று நாளா என்ர பிள்ளையளக் கொஞ்சயில்ல, என்னோட கட்டில்ல வந்து படுக்கிற கடைக்குட்டி என்னைக் கட்டிப் பிடிக்கயில்ல, இறுக்கியணைத்துக் கொஞ்ச வேணும் போல இருக்கு டொக்டர். கொஞ்சலாமா டொக்டர்?"

"என்ன சண்முகம் நீங்க? உங்கட பாசம் எனக்குப் புரியுது இப்ப உங்களுக்கு ஒண்டுமில்லதான். அதுக்காகப் பொதுவான பாதுகாப்பு முறைகளைக் கைவிடலாமா? நீங்க உங்கட தொண்டைநோ சுகப்படும் வரைக்கும், ஏன் இந்த கொரோனா நோய்த் தாக்கம் ஒரு முடிவுக்கு வரும்வரைக்கும் உங்கள் உங்கள் தனிமைகளைக் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் பேணுவது மிகமிக நல்லது Mr. சண்முகம்"

"புரிந்து கொண்டேன் டொக்டர், எல்லாரும் அப்படியே நடந்து கொள்வோம். நன்றிகள் கோடி டொக்டர். இவ்வளவு நேரம் என்னோடு செலவிட்டதுக்கு."

"ஒரு டாக்டர் தன் கடமையைச் செய்வதற்கு ஏன் நன்றி, கடவுள் உங்களை ஆசீர்வதிப்பாராக!"

தொலைபேசியை ஓரமாக வைத்துவிட்டு தொலைக்காட்சியை இயக்கினான் சண்முகம்.

"முதலாவது கொரோனாத் தொற்றாளரான சுற்றுலா வழிகாட்டி பூரண சுகமடைந்து வைத்தியசாலையிலிருந்து வெளியேறினார்!"

என்று தொலைக்காட்சி காண்பித்த பொழுது சண்முகம் கைகளைத் தலைமேல் குவித்துக் கும்பிட்டது. அவன் வழமையாகக் கும்பிடும் தெய்வங்களையல்ல. சுகப்படுத்திய வைத்தியர்களையும் பணியாளர்களையுந்தான் என்பதை அவன் மனைவி புரிந்து கொண்டாள்!

வைத்தியர்களிடம் எந்த உண்மையையும் மறைக்கக் கூடாது !

தொடர்ந்தும் தொலைக்காட்சி தான் வெளிநாடு சென்று வந்த உண்மையை வைத்தியர்களிடம் மறைத்த கொரோனா நோயாளி ஒருவரைப் பற்றிக் கூறிக் கொண்டிருந்தது.

❐






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சலி:

# மனிதருள்ளும் தேவராய் மிளிர்ந்தவர் பொன்னம்பலவாணர் ஐயா

எஸ். சிவஞானராஜா



திருமந்திரப் பொலிவும் தீராத பக்தியும் ஒரு மந்திரமாய் அகம் பூத்தது. கருமரே நூல்பல ஆய்ந்துமே ஞாலம் சிவமாக்கிய சால்புடைய தேவரிவர்.

நையாத மனத்தினனை நைவிக்க வல்லவர்

பொய்யாக விளம்பர மாகார்- ஐயா

பேறான சைவமதைச் சீராக உயர்த்திய


நூறான தேவரிவர்

ஆம்! பொன்னாலை என்ற புனிதமான திருவூரிலே சித்திவிநாயகரின் வரமோடும், வெங்கடேசப் பெருமானின் அருளாட்சியோடும் அவதரித்த பேறு அதனால் வேத சிவாகம புராண இதிகாசங்களில் புலமையும் பாண்டித்தியமும் பெற்றார்.

பொன்னாலை சித்திவிநாயகர் ஆலயத்தின் பிரதமகுருவாகப் பணியாற்றி அவ்வூரைப் பொன்கொழிக்கும் பூமியாக உயர்த்தியவர்.

கந்தபுராண கலாசாரமதை எள்ளளவும் குறையாதபடி நாவலரின் பாதையிலே யாழ்ப்பாண சமூகமதை அழைத்துச் சென்றதில் வெற்றிகண்டவரே பொன்னம்பலவாணர் ஐயா.

தமிழில் ஆழ்ந்த புலமையுடையவராய், சைவசமய நெறியில் ஒழுக்க விழுமியங்களைப் பேணியவராய், சிவதீட்சையும் சிவபூஜையும் ஆற்றும் யோக ஞான அனுட்டானம் மிக்கவராய், இதழியல், அழகியல், வாழ்வியல், எழுத்தியல், பதிப்பியல், உரையியல் போற்றும் முறையியல் வளர்ப்பவராய் தம் வாழ்நாள் முழுவதுமாய் இம்மண்ணின் விடிவுக்காய் தம்மை அர்ப்பணித்த பெருந்தகையாளரே பொன்னம்பலவாணர் ஐயா ஆவார். பௌராணிகர், பண்டிதர், புலவர் பரம்பரையின் கடைசிச் சிவக்கொழுந்தாளராக வாழ்ந்த பொன்னம்பலவாணர் ஒரு சிறந்த புராண படன வித்தகராவார். சுழிபுரம் பறாளாய் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் ஆண்டுதோறும் நடைபெறும் கந்தபுராணப் படிப்புக்குப் பிரதான பயன் உரை சொல்பவராகவும் அதனைக் கொண்டு நடாத்துபவராகவும் பன்னெடுங் காலமாகத் திகழ்ந்து வருகின்றமை வரலாற்றில் பதிவிடப்படுகிறது.



மேலும், பன்னிரு திருமுறைகளையும் ஓதுவதிலும், பதவுரை, பொழிப்புரை, சாராம்பசவுரை செய்வதிலும் இவரைப் போல ஒரு பெரிய மகானைக் காண நாம் பெரும் தவம் செய்ய வேண்டியவர் களாகத் தேவைப்படுத்தப் படுகின்றோம்.

இன்னும் சொல்வதானால், ஆன்மீகத்தில் நன்கு தெளிந்த ஞானப்பாக்கிரமம் கொண்டு சைவ சமயத்தின் தூதுவராக இலங்கையில் துலங்கியவர். ஆம்! ஒரு சமயப் பிரசாகரகராக, உபந்நியாசகராக, விமர்சகராக, ஆசானாக, விரிவுரையாளராக, ஓதுவாராக, இலக்கண இலக்கிய வித்தகராக, உரையாசிரியராக, சிவசின்ன ஆசாரியராக, குருகுல பீடாதிபதியாகப் பயனுகந்தவர்.


அதற்கப்பால், பரபரப்பில்லாத, விளம்பரம் விரும்பாத, தற்பெருமையில்லாத, புகழ்விரும்பாத, பொய்மையாளரைப் பாடாத புண்ணியவாளனாவார். அவசர அவசரமாக அறிக்கைவிடும் சமய நவிலுநர்கள் தோன்றுகின்ற இலங்கைத் திருநாட்டில் பொன்னம்பலவாணர் ஐயா, ஒரு நடமாடியே அருள் சொரிந்த தகைசான்ற பெரியோராவார். அவரைப் புரிந்து கொண்டு அவரிடம் சீடராக படிக்க வல்ல ஒரு மாணவ பரம்பரையை நாம் வரமாக்க இனிவரும் காலங்களிலும் அவரது தேகாந்த நிலையில் முன்னெடுக்க முடியும்.

பொன்னுத்துரை ஐயா தியாகராஜா ஐயா + காமாட்சி தம்பதிகளின் மூத்த புதல்வனாகத் தவமிருந்து, 16.10.1945இல் அவதரித்து 26.03.2021இல் தனது 76ஆவது வயதில் எல்லாம் வல்ல பரம்பொருளோடு ஐக்கியமாகிய தேவரீருக்கு நாம் செய்யவேண்டிய கடமை ஒன்றுண்டு. அதுதான் நாம் போலியாக வாழாமல் ஒரு சைவசமயியாக உண்மையோடு வாழ்வதேயாகும். ❑



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சார்பட்டாப் பரம்பரை
## படம் பற்றியதொரு பார்வை



சார்பட்டாப் பரம்பரை இயக்குனர் ப. ரஞ்சித்தின் கதை மற்றும் நெறியாள்கையில் உருவாகி, அண்மையில் இணையத்தில் வெளியிடப்பட்ட தமிழ்த் திரைப்படம். இதில் பிரதான பாத்திரத்தில் ஆர்யா, பசுபதி, கலையரசன் போன்ற திரைக்கலைஞர்களுடன் மற்றும் பலர் இணைந்து பணியாற்றியுள்ளனர்.

நாம் அதிகம் அறிந்திராத, தமிழ்நாடு - வடசென்னையின் வீர விளையாட்டான ரோசமான ஆங்கிலக் குத்துச் சண்டையின் வரலாற்றுப் பதிவொன்றாக இப் படம் அமைந்துள்ளது. இக் குத்துச் சண்டையைப் பார்வையிட விசேட விருந்தினராக முகம்மது அலி சென்னைக்கு வருகை தந்தமை இந்த விளையாட்டு உலக அழவில் பெற்றிருந்த முக்கியத்துவத்தைக் காட்டுகின்றது.

பயிற்சியாளர்களுக்கேற்ப பரம்பரைகளாகத் தம்மை வரித்துக்கொண்டு அப் பரம்பரைகளுக்கிடையில் இடம்பெற்ற போட்டிகளாகவே எழுபதுகள் வரையில் இவ் வடசென்னை குத்துச்சண்டைப் போட்டிகள் மிகவும் விறுவிறுப்புடன் இடம்பெற்றுவந்துள்ளன.

கூலித் தொழிலாளர்களாக, சேரிகளில் வசிக்கும் ஏழை மக்களாக, சாதாரண மனிதர்களாக வாழும் சனங்களின் கதாநாயகர்களைப் பேசும் இப் படத்தில், கதாநாயகத்துவம் சற்று அதிகமாக வெளிப்படுகின்றபோதும், ஒவ்வொரு பாத்திரத்திற்கும் சரியான முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளமை வரவேற்புக்குரிய அம்சமாகக் காணப்படுகின்றது.


பெண்களையும் மாற்றுப் பாலினத்தவரையும் மாற்றாற்றலுடையோரையும் கொச்சைப்படுத்தும் வகையிலான மலினங்களுக்கு இடந்தராமல், பெண் பாத்திரங்களின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதாய் அமைந்த இப்படமானது, வழக்கமான சினிமாத்தனங்களுக்கு அதிக முக்கியத்துவம் வழங்காது, அண்ணளவாக மூன்று மணித்தியாலங்கள் வரை ஓடக்கூடியதாக உருவாக்கப்பட்டுள்ளது. இப் படத்தின் முன் அரைப் பகுதி விறுவிறுப்பான ஓர் விளையாட்டுப் படமாக நகர்கின்ற அதேவேளை, பின் அரைப் பகுதி சமூக விடயங்களை அதிகமாகப் பேசும் உணர்வுபூர்வமான காட்சிகளுடன் நகர்ந்து நிறைவு பெறுகின்றது.



இத் திரைப்படத்தில் குத்துச்சண்டையுடன் தொடர்புபட்டு வாழ்ந்த உண்மையான மனிதர்கள் சிலரும், அத்தகைய மனிதர்களின் இயல்புகள் கொண்டவையாக உருவாக்கப்பட்ட பாத்திரங்களும் இப் படத்தை ஓர் வரலாற்றுப் பதிவாக மாற்றுவதில் பெரும் பங்களிப்பை வழங்கியிருக்கின்றன. அந்தவகையில், இதுவரை காட்டப்படாத மனிதர்களைத் திரைக்குக் கொண்டுவந்து கலைத்துவத்துடன் வெளிப்படுத்தியிருக்கும் 'சார்பட்டாப் பரம்பரை' திரைப்படம் தென்னிந்திய தமிழ் சினிமாவின் முக்கியமானதொரு மைல்கல் எனலாம்.



எஸ். தனுஜன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாயகன் நாயகி



பொன்னையா

அவனுக்கு 19வயது. அவளுக்கும் அவனை ஒத்த வயதுதான். அவன் தொழிநுட்பக் கல்லூரியில் படிக்கின்றான். இரண்டு தங்கையும் தாயும் தந்தையுமான வறுமையான நிலையிலுள்ள ஓர் குடும்பம். தந்தை மேசன் வேலை செய்கிறார். இவர்களுடன் பெரிய தாயும் வசிக்கின்றார். பெரியதாய் இலங்கை இனப்பிரச்சினைக் காலத்தில் தனது மச்சானைக் காதலித்துக் கூடி வாழ்ந்துள்ளனர். திருமணம் செய்து கொள்ளவில்லை. மூன்று மாதங்கள் இவர்கள் மகிழ்வாக வாழ்ந்த வேளை இனப்பிரச்சினை வலுவடைந்த நேரம் அவளது மச்சான் காணாமல் ஆக்கப்பட்டுள்ளார். இன்றுவரை அவரும் கிடைக்கவில்லை. இவர் வேறு திருமணம் செய்து கொள்ளவில்லை. இவர்களுடன் வசித்து வருகின்றார்.

இவர்களுடைய காதல் கதைக்கும் இவனுடைய காதல் கதைக்கும் கால இடைவெளியும் கால மாற்றங்களுமேஎன்று தனியே சொல்லிவிடமுடியாது. அறியாமையும் கூடக் காரணமாய் இருக்கலாம். சட்டத்தரணியிடம் வந்திருக்கின்றார்கள். சட்டத்தரணி வருவதற்கு முன்பாக நான் இவர்களிடம் "என்ன அலுவலாக வந்தீர்கள்" என வினவினேன். "என்ரை மகனை வற்புறுத்திக் கட்டாயமாகக் கலியாணம் பண்ணி வைக்க நினைக்கினம். அதுதான் ஐயாவைப் பாத்து என்ன செய்யலாம் எண்டு கேக்க வந்தனாங்கள்" எண்டு சொன்னார்கள். எனக்கு ஒரே அதிசயம் என்னடா இது பொம்பிளைப் பிள்ளையளைக் கட்டாயப்படுத்திப் பெற்றோர் கலியாணம் செய்து வைக்கிறது கேள்விப்பட்டிருக்கிறன். வண் சைட் ஆ லவ் பண்ணிவன் கட்டாயமாக கலியாணம் பண்ணிறது கேள்விப்பட்டிருக்கிறன். இது என்ன புதிராக் கிடக்கு?

எனக்கு ஒரே ஆவல். என்ன பிரச்சினை எண்டு கேக்கிறதுக்கு. சிறிது நேரம் கழித்துச் சட்டத்தரணியும் வந்தார். "சொல்லுங்கோ' என்றார். எனக்குச் சொன்னதையே சட்டத்தரணிக்கும் சொன்னார்கள். சட்டத்தரணி விடாது வினாக்களைத் தொடுத்தார். கதைகள் மாற்றம் அடைந்தன.

இருவரும் காதலித்திருக்கிறார்கள். அவன் தையல் கடையில் வேலை செய்கின்றான். இவனும் பெண்வீட்டாரும் சொந்தக் காரர்கள். பெண் வட்டத்திற்கு ரேடியோ, ரீவி திருத்துவதற்காகச் செல்வானாம். இந்த வேளையில் காதல் மலர்ந்திருக்கிறது. ஆனால் தாயார் சொல்லுறார். "வீட்டாக்கள் இவனுக்கு மாயம் மந்திரம் பண்ணி மயக்கிப் போட்டினம்' எண்டு. பின் இந்தப் பையன் பெண் வீட்டிற்கு போய் வருவது ஊருக்குத் தெரியவருமென வீட்டார் பயந்து பையனை தங்களது வீட்டில் தங்க வைத்துள்ளனர். 08 நாட்கள் பெண்வீட்டில் தங்கியுள்ளான். ஒரே அறையில் இருவரும் 08 நாட்களைக் கழித்துள்ளனர். ஆனால் 'எங்களுக்குள் எதுவும் நடக்கவில்லை' எனப் பையன் கூறுகின்றான்.

பெண்வீட்டார் வீட்டிற்குள் இருந்து இவனது பெற்றோர் இவனை வீட்டுக்குக் கொண்டுவந்திட்டினம். இப்ப எழுத்தெழுத அவையள் இவனைக் கூட்டிக் கொண்டுபோக இருந்திருக்கினம். இவன் கோயிலைச் சாட்டி மழுப்பிப்போட்டான்.

இப்ப இவனுக்குக் கலியாணம் செய்ய விருப்பம் இல்லை. அதுதான் கதையின் தொடக்கம். "என்னைக் கட்டாயப் படுத்தி கலியாணம் செய்து வைக்கப் பாக்கினம். அவளின் நடத்தை சரியில்லை" எண்டு சொல்லுறான்.

"ஏன் சரியில்லை?"

"அவா பொடியளோட கதைக்கிறா."

"அது சகஜம் தானே?"

"எனக்கு பிடிக்கேல்லை. எனக்கு ஏற்ற ஆளா இல்லை. நான் நினைத்த மாதிரி இல்லை.

அவா எனக்குப் பொய்யளும் சொல்லுறா. வேலைக்குப் போகாமவிட்டுட்டு போனான் எண்ணுறா. அவவின்ட நடத்தை பிடிக்கயில்லை" என்றான். பெண்ணின் படம் காட்டினான். பொதுநிறமான அழகான பிள்ளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்வீட்டிலும் வறுமை. கட்டி அரைவாசியில் பூசப்பட்ட வீடு. ஒரு நிலம் கொடுத்தா அரசாங்கத்திடம் வீட்டுத்திட்டம் வேண்டி இருப்பியளோ? அவர்களிடம் தருவதற்கு எதுவும் இல்லை.

நாங்கள் குறிப்பைக் கொண்டுபோய் சாத்திரியிட்டக் காட்டிக் கேட்டனாங்க. அவர் சொன்னார் கட்டினாலும் விவாகரத்தில் தான் முடியும் எண்டு. எழுத்து எழுதப்படுமோ எண்டு கேட்கயில்லையோ?

இல்லை.

நாங்க வீட்டை போய் இரண்டு கிழமையால சோதித்துப் பாத்தம். ஒண்டும் இல்லை. இவர் இப்ப ஒண்டும் நடக்கயில்லை எண்டுறார். பேந்து தற்சமயம் குழந்தை பிறந்து டிஎன்ஏயில் செக் பண்ணி இவர்தான் தகப்பன் எண்டு தெரிய வந்தால் அதுக்குப் பிறகு வழக்கு வைக்கணும். உப்பிடி நாங்கள் நிறைய வழக்கு பாத்திருக்கிறம். எண்ட பெடியன் பொய் சொல்ல மாட்டான். உண்மையைத் தான் சொல்லுறான்.

உமக்கு விருப்பம் இல்லாமல் எழுத்து எழுத முடியாது. அப்பிடிப் பிரச்சனை என்றால் எம்மை அணுகவும் என்று ஆலோசனை வழங்கப்பட்டது.

அந்தப் பெண்ணைத் திருமணம் செய்வதற்கான ஆலோசனை அதிகம் அவனுக்கு வழங்கப்பட்டது. எனினும் பல பிரச்சினைகளினையும் சிந்திக்க வேண்டி இருந்தது. தனியே ஒரு பதிலினை வழங்க இயலவில்லை. சண்டைகள், தற்கொலைகள், உளப் பாதிப்புகள் எனப் பலவற்றை அவர்கள் எதிர் கொள்ள நேரிடும். அவர்களுக்குத் தேவையான அறிவுரைகள் வழங்கப்பட்டது.

பின்னர் நாங்கள் இது தொடர்பாக கலந்துரையாடினோம். எந்தப் பிரச்சனையிலும் ஒரு பெண் அதிகம் பாதிப்படைகிறாள். பெண் சரியாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் முதலில் நடத்தை விமர்சிக்கப்படுகிறது.

சமூக சிந்தனை சீர் செய்யப்படவேண்டும்.

சட்ட ரீதியான விளக்கம் கற்பிக்கப்பட வேண்டும்.

வறுமை, சூழ்நிலைகளினைச் சமாளித்து உழைக்கக்கூடிய மனநிலைகள் உருவாக்கப்படவேண்டும்.

முதலில் பஞ்சம், பட்டினி, சமூகச் சீர்கேடுகள் களையப்பட வேண்டுமானால் என்னைப் பொறுத்தவரை அறியாமை விலக்கப்பட்டு மனோபலம், அறிவு, உழைக்கும் திறன், அன்பு ஒரு விடயத்தை ஆழ்ந்து நிதானமாக யோசிக்கும் தன்மை வளர்க்கப்பட வேண்டும்.

அதிகமாக இக்காலங்களில் இளவயதினரே பாதிக்கப்படுகின்றார்கள்.

இவர்களுக்கு வாழ்வினை வெற்றி கொள்வதற்கான எந்த வழிகாட்டல்களும் கிடையாது. அதே பொய்யான உலகத்திற்குள் விழுங்கப்படுகிறார்கள். போதை, சினிமா, சமூக ஊடகங்கள் அதிகம் இவர்கினைத் தாக்குகின்றது.

---

# சிறார்களை வேலைக்கமர்த்துவது யார் குற்றம்

கல்வியை மறுப்பதும் குற்றமன்றோ- சிறாரை
வேலைக் கமர்த்துவதும் குற்றமன்றோ?
இல்லறம் காக்கும் பெற்றோர்தம் பிள்ளைகளை
வேலைக் கனுப்புவதும் குற்றமன்றோ?

வேலைக்குச் செல்லும் பெற்றோரே- உங்கள்
பிள்ளைகளை நன்றே வளர்த்திடுவீர்
காலையும் மாலையும் கல்வியைக் கற்றவர்
பயன்பெற நன்றே ஊட்டிடுவீர்

கல்வியைக் கற்கும் காலத்திலே- நிறுத்தி
வேறிடம் வேலைக்கு அமர்த்திடாதீர்
மேல்நிலை மக்களும் தங்களின் வீட்டினில்
வேலைக்கு அவரை அமர்த்திடாதீர்

பேரிடர் வந்தாலும் பெருங்கொடை வந்தாலும்
சிறார்களை வேலைக்கு அனுப்பிடாதீர்
நேரிய சிந்தையர் பதினெட்டு வயதினுள்
வேலைக் கமர்த்துவதும் பெருங்குற்றமே

எசமான் ஒருபக்கம் எச்மாட்டி ஒருபக்கம்
சிறாருக்கு தண்டனை கொடுத்திடாதீர்!
வசமாக மாட்டிய சிறார்களைத் தினம்தினம்
இச்சைக்குட்படுத்தி கெடுத்தாலும் குற்றமன்றோ!

வேலைக் கமர்த்திட இடைத்தரகர்களாய்
நாளும் செயற்பட்டு பணம்பெறுவோர்
களம் கண்டபோதிலே அடிமைத் தொழிலிற்கு
நிர்ப்பந்திக்கும் இவரைக் கூண்டில் ஏற்றுவீர்


குற்றங்கள் செய்ய கொடூரமாய் வதைத்து
உணவையும் கொடாது உறவு கொள்வார்
குற்றங்கள் வெளியே தெரிந்திடாதிருக்க
கொலையை கூடச் செய்ய முன்வருவார்

சி. சிவானந்தராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தரங்கத் துணை

நா. நவராஜ்



மகாபாரதப்போர் தொடங்குவதற்கான ஆயத்தங்கள் நடக்கின்றன. தங்கள் தங்கள் பக்கத்தைப் பலப்படுத்துவதில் கௌரவர்களும் பாண்டவர்களும் முன்புரமாக இருக்கிறார்கள். அதன் ஒரு கட்டமாக கிருஷ்ணரைத் தமது படையில் சேர்க்க வேண்டும் என்ற எண்ணத்தோடு துரியோதனனும் அருச்சுனனும் துவாரகைக்குச் செல்கின்றனர். அங்கு சென்றவர்களிடம் 'என் படைகள் எல்லாம் ஒரு பக்கமாகவும் மற்றைய பக்கத்தில் தனித்தவனாக நானும் இருப்பேன். நான் போர்களத்தில் ஆயுதம் எடுத்துப்போராட மாட்டேன். இதையெல்லாம் மனத்தில் கொண்டு நீங்கள் இருவரும் உங்கள் பக்கத்திற்கு ஆயுதங்களோடு கூடிய படைவேண்டுமோ... அல்லது தனித்தவனாக நிற்கும் நான் வேண்டுமோ.. என்பதைத் தீர்மானித்துக்கொள்ளுங்கள் என்று கிருஷ்ணர் கூறுகிறார். தெரிவுசெய்யும் முதல் சந்தர்ப்பம் அருச்சுனனுக்குக் கிடைக்கிறது. அவனோ ஆயுதம் ஏதும் அற்று நிற்கும் கிருஷ்ணரைத் தன்பக்கம் வரும்படி அழைக்கிறான். கிருஷ்ணரோ நன்றாக யோசித்து முடிவெடுக்கும்படி கூறுகிறார். அதற்கவன் ' யோசித்துத்தான் சொல்கிறேன். படைகள் என்னோடு இருப்பதை விட நீங்கள் மட்டும் என்னருகில் இருந்தாலே போதும் நான் பகைவர்களை வென்றுவிடுவேன் என்று கூறி கிருஷ்ணரையே துணையாக அழைத்துச் செல்கின்றான்.

இந்தப் புராணக் கதை எமக்கு ஒரு கருத்தைச் சொல்லுகிறது. என்ன கருத்து... எமக்குத் துன்பம் நேருகின்றபோது எம்மைச் சுற்றிப் பலர் இருக்கலாம், எனினும் எம்மில் விருப்பமானவர், எம்மில் அக்கறை உள்ளவர் என்று நாம் நினைப்பவர் எமக்கு அருகில் இருந்தால் எம்மைச் சுற்றிப் பலர் சூழ்ந்திருந்தும் எமக்குக் கிடைக்காத ஆறுதலை நாம் பெற்று விடுகிறோம். ஆதலால் அருச்சுனனுக்கு கிருஷ்ணனர் அமைந்ததைப்போல எம்மில் முழுக்கவனத்தையும் செலுத்தி அக்கறையோடு இருக்கக் கூடிய ஒருவரை நாம் பெற்றிருக்க வேண்டும். அப்படியொருவரைப் பெறுவதால் துன்பங்கள் எமக்கு நேர்கின்றபோது நிறைவான ஆறுதலை நாம் பெறுவது சாத்தியமாகிறது. பெறத்தவறும் சந்தர்ப்பத்தில் வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்ல முடியாமல் தடைப்பட்டு நிற்கவேண்டிய நிலைமை எமக்கு நேர்கிறது. இதனால் வாழ்க்கையில் விரக்தி, வெறுப்பு போன்றன ஏற்பட்டு ஏதோ பிறந்தோம் வாழ்ந்து முடிப்போம் என்ற மனநிலையோடு வாழ்க்கை சுவராஸ்யம் அற்று நடந்து கொண்டிருக்கும் சிலர் ஒரு கட்டத்தில் தம்மைத்தாமே மாய்த்தும் கொள்கிறார்கள்.

எனவே இந்நிலைகள் அற்று உள ஆரோக்கியமான மனிதனாக எம் வாழ்க்கையை ஒழுங்கமைத்து வாழ்ந்து செல்வதன் மூலமே எமது இலட்சியங்களை - இலக்குகளை வெற்றி கொண்டு எங்கள் வாழ்வினையும் சுவையுள்ளதாக நடத்த முடியும். அதற்காக நாம் செய்ய வேண்டியது பலவாக இருப்பினும் உறவினர்களுக்குள்ளோ, நண்பர்களுக்குள்ளோ எம் அந்தரங்கங்களை மனம் விட்டுப் பகிரக் கூடிய முறையில் ஒருவரைப் பெற்றிருப்பதன் மூலம் இலகுவாக நாம் அதனைச் செய்துவிடமுடியும். ஆனால் மனம்விட்டு எம் விஜயங்களைப் பகிரக் கூடியவராக ஒருவரைக் கண்டுபிடிப்பதென்பது சுலபமான ஒன்றல்ல. சிலருக்கு அத்தகைய ஒருவரை இனங்காணச் சில வருடங்கள் கூடச் செல்லலாம். தொடர்ந்த முயற்சியும் சலிப்பில்லாத தன்மையும் கூட இதற்கு அவசியமாகலாம். ஆதலால் வெறுமனே எங்களுடைய பிரச்சினைகளைப் பகிர்வதற்கு ஒருவரைத் தேடாமல் மற்றவர்களுடைய பிரச்சினைகளை கேட்டு அவரது நம்பிக்கைக்குரியவராக எம்மை நாம் மாற்றிக்கொள்வதன் மூலம் எங்களுக்கு உ*யி ஒருவரை நாம் தேடிக்கொள்ளமுடியும். நாங்கள் திறந்த மனந்தோடும் நம்பிக்கைக்குரியவராக ரகசியங்களைக் காத்து நல்ல முறையில் மற்வர்களோடு பழகி வர மற்றவர்களும் எங்களுடன் பழக முற்படுவார்கள். எம்மைச் சுற்றிப் பலநண்பர்கள் இருக்கத்தலைப்படுவர். அவர்களுள் எமக்கு விருப்பமான ஒருவரை எம் அந்தரங்கங்களைப் பகிர நாம் பயன்படுத்தலாம். வாழ்க்கையை தடைகள் இன்றி அநுபவிக்கலாம்.

> கொரோனாத் தடுப்பூசி மருந்து செலுத்தப்படுவது அவசியமானது.
> தடுப்பூசி செலுத்தப்பட்டாலும் சுகாதார வழிமுறைகளைத் தொடர்ந்தும் கடைப்பிடிப்பதும் அவசியமானது.
> நோயிலிருந்து பாதுகாப்பதற்கான சுகாதாரத்துறையினரின் பரிந்துரைகளைக் கடைப்பிடித்து பெருந்தொற்றிலிருந்தும் நம்மை நாமே காப்பாற்றுவோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# கனன்

போட்டோ கெப்பியிங் சேர்விஸ்

165, பிரதான வீதி

( பேருந்து நிலையம் )

பருத்தித்துறை.

**0212263236**

# SAM LANKA

Direct Importers & Distributors

021 222 1002

0777 46 5848

Navalar Road


Illuppaiyadi Junction

Jaffna







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org